# அரசு ஊழியர்

அக்டோபர் 2018

மலர் : 39 இதழ் : 10

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


## சூடா ஒரு கோப்பை சூப்

### விதை விதைப்பேன்

வாழ்வின் ஒவ்வொரு கிளையிலும்

உன்னதம் தேடுவதை

ஒருபோதும் நிறுத்தேன்

உண்மையை மேலும் மேலும்

காதலிப்பேன்

நேசம் விதைத்த காட்டில்

நெருப்பு முளைத்தாலும்

பிடுங்கி எறிந்துவிட்டு

உழுது விதை விதைப்பேன்.

- **சமயவேல்**

# அடக்குமுறைக்கு அஞ்சமாட்டோம்

அரசு ஊழியர், ஆசிரியர்களின் பேரமைப்பான ஜாக்டோ-ஜியோ போராட்டம் அறிவித்தாலே தலைமைச் செயலாளர் தாங்கிக் கொள்ள மாட்டார். ஏனென்றால், நமது வீரஞ்செறிந்த போராட்டம் அவரை நீதிமன்றத்திற்கு வரவழைத்துவிட்டது. அதனால் நமது அடுத்த போராட்ட அறிவிப்பு வழங்கிய மறுநாள் ஊதியப் பிடித்தம் குறித்த அறிக்கையை வெளியிட்டார்.

புதிய பென்சன் ரத்து செய்வதற்கான குழுவின் அறிக்கையை இன்னும் அவரால் பெற முடிய வில்லை. இவர் பெற்றுள்ள 21 மாத ஊதிய நிலுவைத் தொகை நமக்கு வழங்குவதற்கு நடவடிக்கை இல்லை. சிறப்பு காலமுறை ஊதியத்திற்கு ஒரு மாற்றம் இல்லை. ஒரு அரசின் தலைமைச் செயலாளர் தனது நிர்வாக காலத்தில் படித்தவர்களுக்கு வேலை அளிப்பதற்கு பதிலாக, லட்சக்கணக்கான இளைஞர் களின் வேலை வாய்ப்பை தட்டிப் பறிக்கும் அரசாணை 56-ஐ ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை. ஊதிய முரண்பாடுகள் களையப்படவில்லை. லட்சக் கணக்கான காலிப் பணியிடங்கள் நிரப்பப்படவில்லை. ஆனால், போராட்ட அறிவிப்பு என்றால் சம்பளப் பிடித்தம், நடவடிக்கை என தலைமைச் செயலாளர் அறிவிப்பு மட்டும் வேமாக வெளிவருகிறது.

ஏற்கனவே பல அடக்குமுறையை சந்தித்துதான் நமது உரிமைகளை பெற்றுள்ளோம் என்பதை மறந்து விட்டார் போலும். அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர் களின் நியாயமான கோரிக்கைகளை அரசு அழைத்துப் பேசி நிறைவேற்றுவது ஜனநாயகக் கடமையாகும்.

அதில் தவறும்பொழுது போராட்டங்கள் தவிர்க்க இயலாது. அதில் தலைமை செயலாளரின் பங்கு பெருமளவில் இருக்க வேண்டும். அதை விடுத்து விட்டு, மிரட்டுவதும், அடக்குமுறையை ஏவிவிடு வதும் நல்லதல்ல. முதலில் எங்களது கோரிக்கைக்கு பதில் சொல்லட்டும். பிறகு நடவடிக்கையை பார்ப்போம்.

அரசு ஊழியர்கள்-ஆசிரியர்கள் பேரமைப்பான ஜாக்டோ-ஜியோ ஏற்கனவே 30 ஆண்டுகளாக இத்தகைய அடக்குமுறையை சந்தித்து, பல இழப்புகளை இன்முகத்துடன் ஏற்று உரிமைகளை யும், கோரிக்கைகளையும் பெற்றெடுத்த அமைப்பு. தலைமைச் செயலாளரின் இத்தகைய அடக்குமுறை மற்றும் சம்பளப் பிடித்தம் என்ற மிரட்டலை சந்தித்து, 4.10.2018 அன்று ஒரு நாள் தற்செயல் விடுப்பு போராட்டமும், 13.10.2018 அன்று சேலத்தில் வேலை நிறுத்த மாநாடும், நவம்பர் 27 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தையும் மிக வெற்றிகரமாக நடத்தி வெற்றி பெறுவோம். ▼

# ஜாக்டோ-ஜியோ (JACTTO-GEO)

(Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

## காலவரையற்ற வேலைநிறுத்த ஆயத்த மாநாடு

தலைமை: **தலைமைக் குழு**

வரவேற்புரை: **திரு.சி.முருகபெருமாள்**
சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்

துவக்கவுரை: **திரு மு.சண்முகம்** பொதுச் செயலாளர், தொ.மு.ச.

இடம்
**ஸ்ரீவரலட்சுமி திருமண மஹால்**
சூரமங்கலம் மெயின் ரோடு (அலகர் மில் எதிரில்),
திருவாகவுண்டனூர் பை பாஸ் சாலை அருகில்,மெய்யனூர்,
சேலம்-16

நாள்
**13.10.2018**

நேரம்
பிற்பகல் **2.00** மணி

கோரிக்கை விளக்கவுரை : மாநில ஒருங்கிணைப்பாளர்கள்

**திரு. மு.அன்பரசு, பாவலர்.க.மீனாட்சிசுந்தரம்** Ex.MLC
**திரு.செ.முத்துசாமி** Ex.MLC , **திரு. அ.மாயவன்** Ex.MLC
**திரு. ச.மோசஸ், திரு. கே.பி.ஓ.சுரேஷ், திரு. இரா.தாஸ்,**
**திரு. கு.வெங்கடேசன்,** முனைவர் **ஆர்.தாமோதரன்**
**திரு. கு.தியாகராஜன், திரு. மு.சுப்பிரமணியன்**

நிறைவுரை: **திரு.அ.சவுந்தரராசன்** மாநிலத் தலைவர், சிஐடியு

நன்றியுரை: **திரு.டி.கார்த்திகேயன்** சேலம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்

- ஜாக்டோ-ஜியோ

# ஜாக்டோ-ஜியோ (JACTTO-GEO)

(Joint Action Council of Tamilnadu Teachers Organisations and Government Employees Organisations)

## அரசு நிர்வாகத்தின் அலட்சியப் போக்கைக் கண்டித்து 27.11.2018 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தம்

போர்க்களம் பல கண்டு வெற்றி வாகை சூடிய ஆசிரியர், அரசு ஊழியர் பேரினமே!

- 1-4-2003க்குப் பிறகு பணியில் சேர்ந்த அனைவருக்கும் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினை கைவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தினையே அமல்படுத்திட வேண்டும்.
- இடைநிலை மற்றும் முதுநிலை ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதி. ஆசிரியர்கள், அமைச்சுப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப் பணியாளர்கள், பல்வேறு துறைகளிலுள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் ஆகியோருக்கான ஊதிய முரண்பாடுகளைக் களைய வேண்டும்.
- சிறப்புக் காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள் மற்றும் பகுதி நேர சிறப்பாசிரியர்கள், தொகுப்பூதியம், கணினி ஆசிரியர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
- 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளதை உடன் வழங்கிட வேண்டும்.
- அரசாணை எண் 56-ல் இளைஞர்களின் வேலைவாய்ப்பினைப் பறிக்கக்கூடிய வகையில் வெளியிட்ட பணியாளர்கள் பகுப்பாய்வுக் குழுவினை ரத்து செய்திட வேண்டும். பள்ளிக்கல்வித் துறை மூலமாக வெளியிட்டுள்ள அரசாணை எண்கள் 100 மற்றும் 101 மூலமாக ஒழிக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் பணியிடங்களைக் காத்திடவும், அரசுப் பள்ளிகளை மூடுவதைத் தடுத்திடவும் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும்.
- 5000 அரசுப் பள்ளிகளை மூடுவதை உடனடியாகக் கைவிட்டு, சமூக நீதியினைப் பாதுகாத்திட வேண்டும்.

**4-10-2018 ஒரு நாள் ஒட்டுமொத்த தற்செயல் விடுப்புப் போராட்டம்**

**13.10.2018 சேலத்தில் காலவரையற்ற வேலை நிறுத்த ஆயத்த மாநாடு**

**27.11.2018 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தம்**

ஆசிரியர்களே! அரசு ஊழியர்களே! அணிதிரள்வீர்! போராட்டத்தை வெற்றி பெறச் செய்வீர் !! - ஜாக்டோ ஜியோ

# மடைதிறந்த வெள்ளமென படை செல்வோம்! தடை வெல்வோம்; ஒற்றுமையின் விடை சொல்வோம்!

## காத்திருந்த காலம்!

சரியாக ஒரு வருடம் முடிந்திருக்கிறது. சென்ற வருடம் ஜாக்டோ-ஜியோ அமைப்பு காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தி அது நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டு மதுரை உயர்நீதிமன்றக் கிளை 15.09.2017-ம் தேதி ஒரு இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. அதில் “13.10.2017க்குள் தமிழக அரசு, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊதியமாற்றம் ஏற்படுத்த வேண்டும், இல்லாவிட்டால் இடைக்கால நிவாரணம் வழங்க வேண்டும்.’’ இந்த கண்டிப்பான உத்தரவுக்குப் பின்னரே 11.10.2017ம் தேதி தமிழக அரசு ஊதிய மாற்றத்தை அறிவித்தது.

21 மாத காலதாமதத்திற்குப் பிறகு அறிவிக்கப் பட்ட அந்த ஊதிய மாற்றத்தில், முரண்பாடுகளும், குளறுபடிகளும் நிறைந்திருந்ததோடு மட்டு மல்லாமல், மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஏற்படுத்தப்படாத அந்த ஊதிய மாற்றத்தில் தமிழக அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய 21 மாத நிலுவைத் தொகையையும் தமிழக அரசு பிடித்துக் கொண்டது. மேற்படி வழக்கு விசாரணை யின் போது அரசு தரப்பு வழக்குரைஞர், புதிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக திரு.ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ்.தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப் பட்டுள்ளதை சுட்டிக்காட்டி நவம்பர் 2017க்குள் புதிய ஓய்வூதியத் திட்டத்தினை திரும்பப் பெறுவது குறித்து அரசு நிச்சயமாக முடிவு செய்யும் என்று உயர்நீதிமன்றத்தில் ஒரு உறுதிமொழி அளித்தார்.

ஆனால் தமிழக அரசு கொடுத்த உறுதிமொழி ஓராண்டை கடந்த பின்பும் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவது குறித்து இன்னும் அறிக்கை ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை. அதேசமயம் நீதிமன்றத்தில் கடந்த செப்டம்பர் மாதத்திலிருந்து அக்டோபர் மாதத்திற்கு வாய்தா போடப்பட்ட வழக்கும் அதன்பிறகு வாய்தாவிற்கு வராமல் தடுக்கப்பட்டு வருகிறது. ஜாக்டோ-ஜியோ தரப்பு வழக்குரைஞர்கள் மதுரை உயர்நீதிமன்றத்தை மேற்படி வழக்கு விசாரணைக்கு வராமல் உள்ளதை சுட்டிக்காட்டி பட்டியலிட பலமுறை வலியுறுத்தியும் நிர்வாக நடைமுறைகள், நீதிபதிகள் அனுமதி போன்ற காரணங்கள் கூறப்பட்டு வழக்கு கடந்த ஒரு வருட காலமாக பட்டியலிடப்படாமல் உள்ளது.

## எதிர்மறைகளும், எதிர்வினைகளும்

சென்ற வருடம் (2017) ஜாக்டோ-ஜியோ ஒரு வலிமையான வேலை நிறுத்தப் போராட்டம் நடத்திய பின்னர்தான் அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுக்கு ஊதிய மாற்றம் ஏற்பட் டது என்பதையும், நீதி மன்றம் நம்முடைய போராட்டத்தில் நியாயம் இருந்ததால்தான் அரசாங்கத்தை உடனடியாக ஊதிய மாற்றம் அறிவிக்கப் பணித்தது என்பதையும் நாம் மறந்துவிட முடியாது. ஆனால் அந்த ஊதிய மாற்றம் மட்டுமே அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் பிரதான கோரிக்கையல்ல, அதையும் தாண்டி புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெற வேண்டும், இருக்கும் ஊதிய முரண்பாடுகள், குளறுபடிகளை சரிசெய்ய வேண்டும், சத்துணவு அமைப்பாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள், அங்கன்வாடி ஊழியர்கள், வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சி செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள் மற்றும் அனைத்து துறைகளில் பணியாற்றும் சிறப்பு காலமுறை ஊதியம் பெற்றுவரும் பணியாளர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்க வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டும், மேலும் ஆசிரியர் பணித் தொகுதியில் வரும் பகுதி நேர சிறப்பு ஆசிரியர்கள், தொகுப்பூதிய ஆசிரியர்கள், கணினி ஆசிரியர்கள் போன்ற பல்வேறு பணிகளை செய்யக்கூடிய ஆசிரியர் ஊழியர்களின் உழைப்பு, முறையான ஊதியமின்றி பல ஆண்டுகளாக சுரண்டப்பட்டு வருகிறது.



இவர்கள் எவ்வித பதவி உயர்வும், பணி நன்மை களும் இல்லாமல் உழன்று வருகின்றனர். இவர்களுக்கும் வரையறுக்கப்பட்ட ஊதியம் வழங்கப்பட வேண்டும். நிரப்பப்படாமல் விடப்பட் டுள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், மாவட்ட நீதிபதிகள் போன்றோருக்கு வழங் கப்பட்டது போல் அரசு ஊழியர்கள் ஆசிரியர் களுக்கும் 1.1.2016 முதல் 30.9.2017 வரை ஊதிய நிலுவைத் தொகை வழங்க வேண்டும், அரசுத்துறைகளில் ஆட்குறைப்பு நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். காலியாக உள்ள பணியிடங்களில் ஒப்பந்தமுறை ஊழியர்களை நியமிப்பதை விடுத்து நிரந்தர ஊழியர்களை நியமிக்க வேண்டும், போன்ற பல முக்கிய கோரிக்கைகளை நிறைவேற்ற அரசிடம் தொடர்ந்து கோரிக்கைகள் வைக்கப்பட்டும் அரசு அதைப்பற்றி சிறிதளவும் அக்கறை கொள்ளாததோடு, அதற்கு எதிர்மறையான வேலைகளை செய்ய ஆரம்பித்தது.

## எதிர்மறை 1

2016ல் சட்டமன்ற விதி எண்.110ன் கீழ் வெளியிடப்பட்ட அறிவிப்புகளில் புதிய



ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய்ந்து அறிக்கை அளிக்க சாந்தா ஷீலா நாயர் ஐ.ஏ.எஸ். தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு, அது நான்குமுறை நீட்டிக்கப்பட்டு, ஜெயலலிதா அவர்கள் மறைவுக்குப் பின்னர் அது என்ன ஆனது என்று தெரியாமலேயே கைவிடப் பட்டு, பிறகு மீண்டும் ஜாக்டோ ஜியோ போராட்டக் களம் கண்டபிறகு ஸ்ரீதர் ஐ.ஏ.எஸ்.தலைமையில் வல்லுநர் குழு அமைக்கப்பட்டு நவம்பர் 2017க்குள் அறிக்கை அளிக்க உத்தரவிடப்பட்டது.

புதிய ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்வது குறித்து பரிசீலிக்க ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி தலைமையில் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு, ஒருவருட காலத்திற்கும் மேலாக அதை பரிசீலித்து அறிக்கை அளிக்காத அரசின் நயவஞ்சகத்தை எதிர்த்த பின்னர், நீதிமன்றத்தில் பரிந்துரைகளை அளிப்பதற்றான உத்தரவாதம் உறுதி படுத்தப்பட்டது. ஆனால் உத்தரவாதம் அளித்து ஓராண்டு நிறைவடையும் நிலையில் இன்னும் அது குறித்த பரிந்துரைகள் வெளிவராததும், திரு. ஸ்ரீதர்,ஐ.ஏ.எஸ் குழுவும் திருமதி சாந்தா ஷீலா நாயர்,ஐ.ஏ.எஸ் குழுவைப் போலவே வேண்டுமென்றே காலதாமதம் செய்வதும் நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்ட உத்தர வாதத்திற்கு எதிர்மறையாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கையாகும்.

## எதிர்மறை 2

திரு. ஸ்ரீதர்,ஐ.ஏ.எஸ் தலைமையிலான வல்லுநர் குழு அமைத்தது தொடர்பான அரசு செய்திக்குறிப்பில் மேற்கண்ட குழுவானது ''நடைமுறையில் உள்ள ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்துவதற்கான பணிகளையும் மேற்கொள்ளும்'' என்ற ஒரு புதிய அறிவிப்பும் சேர்த்திருந்தது. இந்த அறிவிப்பு புதிதாக சேர்க்கப்பட்டதால் நமக்கு அதுகுறித்த சந்தேகம் எழுந்தது. நடைமுறையில் உள்ள ஓய்வூதியத் திட்டத்தை மேம்படுத்துவது என்றால் இந்த புதிய பென்சன் திட்டம் தொடரப் போகிறது என்பதான அர்த்தத்தை அந்த அறிவிப்பு கொண்டுள்ளதாக நமக்குத் தோன்ற இது குறித்து அரசிடம் விளக்க கோரிக்கை வைக்கப்பட்டு அது இன்றுவரை கண்டுகொள்ளப்படாமல் உள்ளது.

## எதிர்மறை 3

11.10.2017ஆம் தேதி ஊதிய மாற்றம் தொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், அரசின் வருவாய் இனச் செலவினங்களைக் குறைத்திட பல்வேறு துறைகளில் உள்ள பணியாளர் நிலைகளை ஆய்வு செய்து அதில் தேவையற்ற பணியிடங்களை இனங்கண்டறியவும் இதரப் பணியிடங்களில் வெளிமுகமை மூலமாகவோ அல்லது ஒப்பந்த அடிப்படையிலோ முதல்கட்டமாக பணி நியமனங் களை மேற்கொள்ளதக்க பரிந்துரைகளை அளித்திட "பணியாளர் சீரமைப்புக் குழு'' (Staff rationalization Committee) உருவாக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டிருந்தது. அதற்கு நாம் எதிர்ப்பு தெரிவித்தோம்.

இத்தகையதொரு பரிந்துரையை அளிக்க ஊதிய மாற்ற அலுவலர் குழுவிற்கு அதிகாரம் இல்லை என்பதுடன் அதன் அதிகார வரம்பு என்பது மத்திய அரசின் ஏழாவது ஊதியக்குழு பரிந்துரைத்துள்ள ஊதிய விகிதங்களின் அடிப்படையில் மாநில அரசில் பணிபுரியும் ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு ஊதியவிகிதத்தை உயர்த்தி வழங்குவது குறித்து பரிந்துரைகள் வழங்குவது மட்டுமே என்பதையும் சுட்டிக்காட்டி அத்தகைய நடவடிக்கையை கைவிட வேண்டும் என்றும் அரசிடம் கோரிக்கை வைத்தோம்.

ஆனால் நம்முடைய கோரிக்கை புறந்தள்ளப்பட்டு அரசாணை எண்.56 வெளியிடப்பட்டு ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ்.அதிகாரி ஆதிசேஷய்யா பணியாளர் சீரமைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதிகாரி ஆதிசேஷய்யாவின் நோக்கம் எந்தெந்தப்பணிகளை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனியார்வசம் ஒப்படைக்கலாம் என்பதை விட எந்தெந்தப் பணிகளை அரசின் வசம் விட்டுவைக்கலாம் என்பதானதாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

அரசுப் பணிகளை சீரமைக்கும் முறையாக இது காட்சிப்படுத்தப்பட்டாலும் ஆதிசேஷய்யா குழுவின் நோக்கம் அரசுப் பணியிடங்களை குறைப்பதைத் தாண்டி, தனியார் வசம் அவற்றை ஒப்படைப்பதற்கான நடைமுறை ஏற்பாடே என்பதில் ஐயமில்லை. இதற்கான ஏற்பாடுகள் குதிரை வேகத்தில் முடுக்கிவிடப்பட்டுள்ளன என்பதற்கான ஆதாரம் முதற்கட்டமாக கருவூலக் கணக்குத் துறை தனியார்துறைக்கு தாரை வார்க்கப் பட்டிருப்பதாகும். புதிய ஓழ்வூதியத்திட்டத்தை திரும்பப் பெற இரண்டாண்டுகளுக்கும் மேலாக வல்லுநர் குழுக்கள் அறிக்கை தயாரிக்க முடியாமல் (?) திணறிக்கொண் டிருக்கும் (!) நிலையில் ஆதிசேஷய்யா கமிட்டி இரண்டே மாதத்தில் தன்னுடைய நடவடிக்கையை துரிதப் படுத்தியிருப்பது அரசு, சொல்வது ஒன்று செய்வது ஒன்று என்பதற்கான எதிர்மறை செய்கைக்கு சிறந்த உதாரணமாகும்.

## மாண்டுபோன நியாயங்கள்!

நாட்டில் நியாயங்கள் மாண்டு போய் விட்டன என்பதற்கு ஆள்பவர்களே உதாரணம். அதிகார வர்க்கமாய் அறியப்படும் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் 1.1.2016 முதல் ஊதிய மாற்றம் பெற்று விட்டார்கள். ஆள்பவர்களுக்கு ஏவல்புரியும் காவல் துறை ஐ.பி.எஸ்.களும் 1.1.2016 முதல் நிலுவை பாக்கியின்றி ஊதியம் பெற்று விட்டார்கள். மக்கள் பிரதிநிதிகளாய் இருக்கும் சட்ட மன்ற உறுப்பினர்கள் முதல் கேபினட் அமைச்சர்கள் வரை 100 சதவீத சம்பள உயர்வு பெற்று விட்டனர். ஐந்தாண்டுகள் மட்டுமே சட்ட மன்ற உறுப்பினர் பதவியில் இருந்தாலும் அவர்கள் ஆயுள் முழுவதும் ஓய்வூதியம் பெற அந்தத் தொகையையும் ஆட்சியாளர்கள் உயர்த்தி விட்டார்கள்.

மாவட்ட நீதிபதிகளும் 1.1.2016 முதல் நிலுவைத் தொகை பெற்றுவிட்டார்கள். நாம் இவற்றையெல் லாம் ஏன் கொடுத்தீர்கள் என்று கேட்கவில்லை. அரசாங்கத்தின் உயர் பதவிகளில் உள்ளவர்கள் மட்டும் ஒரு நயா பைசா மீதம் வைக்காமல் ஊதியம் பெறும் போது அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் மட்டும் என்ன பாவம் செய்தார்கள்? அவர்களுக்கு சம்பளம் உயர்த்துவது என்றால், நிலுவை கொடுப்பது என்றால் மட்டும் ஏன் ஆட்சியாளர்களுக்கு கையும், மனதும் சுருங்கிக் கொள்கிறது? நமக்கு அவர்கள் நியாயமான காரணம் ஒன்றைச் சொல்லட்டும். நிதி பற்றாக்குறை என்றால் அவர்கள் வாங்கும் சம்பளத்திற்கு அது பொருந்தாதா?

அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் தங்களுக்கான ஊதிய மாற்றத்திற்காக போராடினால், அதிகார வர்க்கத்தினர், நடத்தை விதி மீறல் என்கிறார்கள், போராடத் தடை என்கிறார்கள், அலுவலகக் குறிப்பாணை கொடுக்கிறார்கள். இவற்றை எல்லாம் நீதிமன்றத்தின் மூலம் நியாயப்படுத்துகிறார்கள். உண்மையான நிதிச்சுமைக்கு முதலில் தோள் கொடுக்க வேண்டியவர்கள் ஆட்சியாளர்களும் அதிகார வர்க்கமும் தானே. அவர்கள்தான் நிர்வாகத்தை எப்படி நடத்துவது என்று திட்டமிடு கிறார்கள். அவர்கள் தங்களுக்கானதை எல்லாம் எடுத்துக்கொண்டு, ''கஜானாவில் எதுவுமில்லை அதனால் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் நிலுவைத் தொகையை கேட்கக்கூடாது'' என்று சொல்வது எந்த நாட்டிலும் ஏற்றுக்கொள்ள முடியாத அநியாயம் அல்லவா?

இவை மட்டுமின்றி அரசியலமைப்பு சட்டம் வகுத்துள்ள எல்லோருக்கும் கல்வி வழங்க வேண் டியது அரசின் கடமை என்ற கோட்பாட்டிலிருந்து விலகி புற்றீசல் போல தனியார் பள்ளிகளை துவக்க தாராள அனுமதி வழங்கி அரசுப்பள்ளிகளில் அடிப்படை வசதியின்மை ஆசிரியர்கள் குறைபாடு போன்றவற்றினால் பொதுமக்களே அரசுப் பள்ளி களை நாடாமல் தனியார் பள்ளிகளுக்கு செல்லும் நிர்ப்பந்தத்தை இந்த அரசு ஏற்படுத்தியுள்ளதோடு கல்வியிலும் தனியார் மயத்தினை கொண்டுவரும் நோக்கில் 5000 அரசுப் பள்ளிகளை மூடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதும் பொது மக்கள் நலனுக்கு எதிரான நடவடிக்கைகளாகும். இவற்றையெல்லாம் வாய்மூடிக்கொண்டு வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்க அரசு ஊழியர்கள் ஒன்றும் அரசின் அடிமைகள் அல்ல.

பொதுமக்களில் ஒரு பகுதியினர்தான் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும். எனவே மேற்கண்ட பிரச்சனைகளை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பிரச்னையாகப் பார்க்காமல் பொதுமக்கள் நலம், இளைஞர்களுக்கான அரசு வேலைவாய்ப்புகள், குழந்தைகளின் கல்வி போன்றவற்றிற்காக நாம் இன்னொரு போராட்டத்தை கையிலெடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் எழுந்துள்ளது.

## பிரித்தாளும் சூழ்ச்சி வலையில் சிக்கிக்கொண்ட சிலந்திகள்!

சென்ற வருடம் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் பெருந்திரளாக ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு என்ற கொடையின் கீழ் ஒரு பெரிய சக்தியாக திரண்டபோது அரசுத்தரப்பில் ஆசை வார்த்தைகள் கூறி ஒரு பகுதியினரை போராட்டக்களத்திலிருந்து இழுக்கும் முயற்சிகள் நடந்தன. அப்போதே நாம், போராட் டத்தை நிறுத்தி வைப்போம் என்று கூறியவர்களிடம் கடந்தகால வரலாறுகளைச் சுட்டிக்காட்டி அரசாங்கம் பிரித்தாளும் சூழ்ச்சியை மேற்கொள்கிறது என்று விளக்கினோம். அப்படியும் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பிலிருந்து சிலர் பிரிந்து சென்றனர்.

போராட்டக் களத்திலிருந்து விலகிச் சென்றவர்கள் கூறிய பிரதான காரணம் ''முதல்வர் கண்டிப்பான உறுதி கொடுத்துள்ளார் அதனால் நாம் போராட்டத்தை தொடர வேண்டாம்.'' என்பதாகும். அவர்கள் சொல்லியபடி பார்த்தாலும் இதோ ஒரு வருடம் கடந்து விட்டது. இன்னமும் முதல்வர் புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்ப பெறுகிறார் என்று நாம் இலவு காத்த கிளிகளாக நிற்கிறோம்.

சென்ற வருடம் நாம் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடத்தியிருக்காவிட்டால் ஊதிய மாற்றம் பெறுவது இன்னமும் தள்ளிப் போயிருக்கும் என்கிற யதார்த்தத்தையும் அனைவரும் எண்ணிப் பார்க்க வேண்டும். உண்மையில் அரசும் முதல்வரும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் மீது அக்கறை கொண்டவர்களாக இருந்திருந்தால் 21 மாத ஊதிய மாற்ற நிலுவையை நம்மிடமிருந்து பறித்திருக்க மாட்டார்கள். போராட்டம் வேண்டாம் முதல்வர் நிச்சயமாக செய்வார் என்று சொன்னவர்கள் யாரும் முதல்வர் உத்தரவாதம் கொடுத்து ஒருவருடம் கடந்துவிட்ட நிலையில் அது குறித்து முதல்வரிடம் நினைவூட்டல் செய்து அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான உரிமைகளை பெற்றுத்தர நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும்.

ஆனால் அது அவர்களால் முடியாது என்பதை இப்போது புரிந்து கொண்டிருப்பார்கள். முதல்வர் சொன்ன உத்தரவாதம் பிரித்தாளும் சூழ்ச்சியின் ஒரு பகுதி என்றும், நயவஞ்சகத்தின் முக்கிய பகுதி என்று அவர்கள் இப்போதேனும் புரிந்து கொண்டு மீண்டும் சூழ்ச்சி வலையில் சிக்கிக் கொள்ளாமல் உரிமைகளை வென்றெடுக்கும் வரை போராட்ட முனையில் நிற்க முன்வர வேண்டும்.

ஒன்றுபட்டு போராடி உரிமைகளை கண்டிப்பாக வெல்லலாம் என்ற நிலைமை கனிந்து வந்த வேளையில் அரசின் பிரித்தாண்ட சூழ்ச்சியினால் புதிய ஓய்வூதியத் திட்டத்தை நீக்க எடுக்கப்பட்ட முனைப்பான நடவடிக்கைகள் முனை மழுங்கிப் போயின. அதன் காரணமாகவே இன்றுவரை நாம் பழைய ஓய்வூதிய திட்டத்தை தொடர்வதற்கான உத்தரவுகளை

அரசிடமிருந்து பெறுவதில் தாமதங் களை சுமக்க வேண்டிய நிலை எழுந்து, இன்று வல்லுநர் குழு என்ற ஒன்றே கண்துடைப்பு நாடகம் என்பது உறுதிபடுத்தப்பட்டிருக்கிறது.

எனவே சரியான புரிதலின்றி நம்மைவிட்டு பிரிந்து போனவர்கள் அனைவரையும் மீண்டும் ஒன்றிணைந்து போராட வருமாறு அன்புடன் அழைக்கிறோம். அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஆகிய நாம் பொதுமக்கள் நலனில் ஒரு மாபெரும் சக்தி என்பதை அரசுக்கு உணர்த்திக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். நாட்டில் ஏற்பட்டிருக்கும் கல்வி உரிமை பறிப்பு, வேலை வாய்ப்பின்மை, விவசாயம் நலிவடைந்துள்ள நிலை தனிமயத்தின் ஆதிக்கம், ஊழல், கொள்ளை போன்றவற்றை தட்டிக்கேட்கும் முதன்மை பகுதியினராக எப்போதும் அரசு ஊழியர் ஆசிரியர் சமுதாயம் இருக்க வேண்டும். அரசிடம் நாம் ஊதியம் பெறுவது மக்களுக்காக தொண்டாற்றுவதற்காகவே. அதை சிறப்பாக செய்ய நமக்கானதையும், மக்களுக்கானதையும் நாம் ஒன்றுபட்டு கேட்பதன் மூலமே பெற முடியும் என்பதை மனதில் கொண்டு அனைவரும் போராட்ட களம் புக தயாராவோம். தர மறுக்கும் உரிமைகளை அரசிடம் தட்டிக் கேட்போம். தர மறுத்தால் சிம்மாசனத்தை தூக்கி எறிவோம்.

## நிதிப்பயன்கள், ஊதிய மாற்றம் அரசின் கருணையல்ல ஆசிரியர்கள், அரசு ஊழியர்களின் உரிமை!

அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு ஏதாவது பணப்பயன்கள் அறிவித்தால் அந்த அறிவிப்பின் கடைசி வரிகளில் இதனால் அரசுக்கு இத்தனை கோடிகள் கூடுதல் செலவினம் ஏற்படும் என்ற வாசகம் தவறாமல் இருப்பதை நாம் காணலாம். எம்.எல்.ஏ.க் களுக்கு சம்பளங்கள் 100 சதவீதம் உயர்த்தப்பட்டு அறிவிப்பு வந்தபோது அதில் இந்த விவரம் இல்லை. முதல்வருக்கான தனிப்பாதுகாவலர்கள், கான்வாய்கள் போன்றவற்றிற்காக சென்ற ஆண்டு செய்யப்பட்ட செலவுகளை விட இந்த ஆண்டு செலவினம் எவ்வளவு என்பதைப் பற்றியோ, முதல்வர் கலந்து கொண்டு நல விழாக்களினால் அரசுக்கு ஏற்பட்ட செலவினம் பற்றியெல்லாம் செய்தித்தாள்களில் விபரங்கள் வெளியிடப்படுவதில்லை.

ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோயில் ஆண்டி என்பது போல் அரசுக்கு இளைத்தவர்கள் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும்தான். சென்ற ஆண்டு முதல்வர் தன்னுடைய அறிக்கையில் ஊதிய மாற்றத்தின் காரணமாக அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினங்களை தமிழ்நாடு அரசு அலுவலர்கள் ஆசிரியர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினரின் நலன் கருதி மாநில அரசே முழுமையாக ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவித்திருந்தது அபத்தமான ஒன்றாகும். ஒரு மாநில அரசு அதன் ஊழியர்களுக்கு இந்திய அரசியலமைப்பு சட்ட வழிகாட்டுதலின் படியும், நாடாளுமன்றம், பாராளுமன்றம் வகுத்துள்ள கோட்பாடுகளின் படியும் உச்சநீதிமன்றத்தின் உத்தரவுகள் படியும், நிறைவான ஊதியத்தை உறுதிப்படுத்த வேண்டியதும், நிலை நிறுத்துவதும், குறிப்பிட்ட கால இடைவெளிகளில் ஊதியங்களை பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப திருத்தி அமைக்க வேண்டியதும் அதன் கடமையும் பொறுப்புமாகும்.

அதே சமயம் மாநில அரசின் கீழ் பணிபுரியும் ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவரும் இம்மாநில முன்னேற்றத்திற்காகவும், அரசு திட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதிலும், அரசின் வருவாயை பெருக்க அரசு தீட்டும் திட்டங்களை முழுமையுடன் செயல்படுத்தவும் தயாராகவும் இருக்கக் கடமைப்பட்டவர்கள் என்பதையும் நாம் மறுக்கவில்லை. எனவே மாநில அரசு அதன் ஊழியர் களுக்கு ஆசிரியர்களுக்கு அறிவிக்கும் பணப்பயன் சம்பந்தப்பட்ட அறிவிப்புகளில் இதனால் அரசுக்கு இத்தனை கோடி கூடுதல் செலவினம் ஏற்படுகிறது என்கிற சொற்றொடரை நீக்க வேண்டும் என்று நாம் கேட்டுக் கொள்கிறோம். இது மக்கள் மத்தியில் அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கே அரசின் வருவாய் போகிறது என்பதான தோற்றத்தையும் வெறுப்பையும் தோற்றுவிக்கும் செயலாகும்.

## சமூக அநீதிகள்!

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வராக இருந்தவர்கள் எவரும், இந்த மாநிலத்திற்கென பிரத்தி யேகமாக இருந்த பல விஷயங்களை விட்டுக் கொடுக்காமல் காத்து வந்தார்கள். சில விஷயங்களை காக்க முடியாவிட்டாலும் தங்களின் எதிர்ப்புகளை பதிவு செய்தார்கள். சமூக நீதியைக் காக்க கொண்டு வரப்பட்ட திட்டங்கள் இன்று காணாமல் போகின்ற நிலையில் இருக்கின்றன. நீட் தேர்விலிருந்து தமிழக மாணவர்களுக்கு விலக்கு என்பது கையிலிருந்து நழுவிய கண்ணாடிக் குவளையாகிப் போனது. மருத்துவ மேற்படிப்பு மாணவர்கள் கிராமப்புறங்களில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் இரண்டு ஆண்டுகளுக்கு பணி செய்தால் அவர்களுக்கு மேற்படிப்பில் கொடுக்கப்பட்டு வந்த 50 சதவீத இட ஒதுக்கீட்டிற்கான கதவுகளும் இழுத்து மூடப்பட் டுள்ளன.

தமிழக அரசு அலுவலகங்களில், பாலிடெக்னிக் கல்லூரிகளில் தமிழக மாணவர்களுக்கென இருந்த இடஒதுக்கீடு இப்போது எல்லோருக்குமானதாக மாற்றப்பட்டிருக்கிறது. அரசுத்துறைகளில் காலியாக விடப்பட்ட பணியிடங்கள் பல வருடங்களாகியும் நிரப்பப்படவில்லை. அரசு ஊழியர்கள் ஆசிரியர் களுக்கான மத்திய அரசின் ஏழாவது சம்பளக் கமிஷன் பரிந்துரைகள் பல அளப்பரிய போராட்டங்களுக்குப் பின்னர் நீதிமன்ற தலையீடு காரணமாக 21 மாத நிலுவை பிடித்துக்கொண்டு வழங்கப்பட்டுள்ளது. நாள்தோறும் வரும் அறிவிப்புகளும் அறிக்கைளும் அரசு நிர்வாகத்தில்

'முதல்வரின் இதயம்' என்ற ஏழை எளிய மக்களுக்கான சலுகைகள் கழற்றப்பட்டுவிட்டு அந்த இடத்தில் 'அதிகார வர்க்கத்தின் மூளை' பொருத்தப்பட்டுள்ளதை உறுதி படுத்துகிறது.

### இரக்கமற்ற அரக்க குணம்!

வந்து போனவர்கள் எல்லாம் லஞ்ச லாவண்யம் செய்து தின்று தீர்த்தபின்னர் கொஞ்ச நஞ்ச பணம்கூட கஜானாவில் இல்லை என்று பஞ்சப்பாட்டு பாடும் அரசாங்கங்கள் சிக்கன நடவடிக்கை என்ற பெயரில் தீர்த்துக்கட்ட நினைப்பது மக்கள் நலத் திட்டங்களையும், சலுகைகளையும் மற்றும் அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்களுக்கான சம்பளங்களை யும்தான். வெயிலோ, மழையோ, பனியோ, புயலோ எத்தகைய இடர்ப்பாடுகளிலும் இயற்கைப் பேரிடர்களி லும் மக்கள் சேவையாற்ற அரசு ஊழியர்கள் உறுதுணையாக இருந்து வருகிறார்கள். இந்த நடவடிக்கையை சேவையாகப் பார்க்காமல் ஒரு அரசாங்கம் செலவாகப் பார்க்கும் என்றால் அந்த அரசாங்கத்திடம் இதயம் என்ற ஒன்று இல்லை என்றுதான் அர்த்தம். தங்கள் கணக்குப் புத்தகங்களில் லாபக்கணக்குகளை எட்டுவதற்காக, ஏழை எளிய மக்களின் வாழ்க்கைப்பக்கங்களை கிழித்துப்போட அரசாங்கங்கள் நினைப்பது இரக்கமற்ற அரக்க குணமாகும்.

நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் 13.10.2017க் குள் வெளியிடப்பட்டுள்ள ஊதிய மாற்றங்களில், மேலே கூறப்பட்டுள்ள குறைபாடுகளை அரசு உடனடியாக நிவர்த்தி செய்து நிலுவை தொகைகளை வழங்கிட ஆவன செய்ய முன்வராத நிலையில், உயர்நீதிமன்றத்தில் ஊதிய மாற்றம் சம்பந்தமான வழக்கு பட்டியலிடப்படாமல் தடுக்கப்பட்டிருப்பதால் ஊதிய மாற்றத்தில் அரசு செய்துள்ள குறைபாடுகளை சுட்டிக்காட்டி அதற்கான உரிய உத்தரவுகளையும் உயர் நீதிமன்றத்தின் மூலம் பெற முடியாத நிலை கடந்த ஒரு வருடமாக இருந்து வருவதால் நாம் மீண்டும் போராட்டங்களை முன்னெடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

### போராட்டகளமும் போர்க்களமும் வேறு வேறல்ல!

உரிமை மீட்பு என்று வந்து விட்டால் போராட்டக் களத்திற்கும் போர்க்களத்திற்கும் எந்த வேறுபாடும் கிடையாது என்ற அடிப்படைச் சித்தாந்தத்திலிருந்து நாம் யாரும் விலகிவிடாமல் இருக்க வேண்டும். சென்ற ஆண்டு நடந்த காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் வேலைநிறுத்தம் செய்வ தற்கு நீதிமன்றம் தடை விதித்த பிறகும் ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பு மன உறுதியோடு நின்றது. இதன் உறுதிப்பாடும் வலிமையும்தான் ஊதிய மாற்றம் உடனடியாக ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை அரசுக்கு நீதிமன்றம் உணர்த்தி அழுத்தம் தர வழிவகுத்தது. சாதாரண ஆசிரியனையும் அரசு ஊழியனையும் அந்தப் போராட்டம் போர்வீரனாக மாற்றியிருந்தது. அதிகாரவர்க்கம் ஏவும் அடக்கு முறைகளும், அரசாங்கம் கூறும் பொய்யுரைகளும், நீதிமன்றம் போடும் தடைகளும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கான சவால்களாக நின்றன.

விரோதமோ, துரோகமோ, தடையோ, சிறையோ எந்த சவால்களாக இருந்தாலும் அதை எதிர்கொள் ளும் வீரமும் தீரமும் அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் உண்டு என்பதை 1988, 2003 போராட்டங்களுக்குப் பிறகு 2017ல் மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டிருக்கிறது. அது போன்ற தொரு சவாலை ஒன்றுபட்ட உறுதிப்பாட்டோடு உடைத்தெறிவதே இப்போதும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் தலையாய நோக்கமாக மாறி யிருக்கிறது.

### உலகம் கண்டிராத உன்னத சக்தி!

அதிகார வர்க்கத்திற்கு எதிராக சமரசமற்ற போராட்டங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கும் தொழிலாளர், உழைப்பாளர், ஊழியர் வர்க்கம் போராட்டக்களத்தில் நிற்கும் வரைதான் அதற்கான உரிமைகள் உறுதிபடுத்தப்படும் என்பதை பறை சாற்றிய யூஜின் விடெப்ஸ் என்ற தொழிலாளி எழுதி வைத்த கவிதையின் சாராம் கிட்டத்தட்ட 110 ஆண்டுகளுக்குப் பிறகும் அப்படியே இருக்கிறது என்றால் அதற்குக் காரணம், இடைவிடாத போராட்டங்கள் மட்டுமே உழைப்பாளர், தொழிலாளர், ஊழியர் வர்க்கத்தினரின் உரிமைகளை நிலைக்க வைத்திருக் கிறது என்பதுதான். ''தொழிலாளர் இயக்கம் பத்தாயிரம் முறை விழும், எழும், அதன் குரல்வளை இறுக்கப் படும், தொண்டை அடைக்கப்படும். நீதிமன்றம் கேள்விக்கணைகளைத் தொடுக்கும், குண்டர்களால் தாக்கப்படும், பத்திரிகைகளால் வசைபாடப்படும், அரசியல்வாதிகளால் ஏய்க்கப்படும், கோழைகளால் நடுவீதியில் விடப்படும், துரோகிகளால் வஞ்சிக்கப் படும், தலைவர்களால்கூட விற்றுவிடப்படும்.

இவ்வளவு சோதனைகள் இருந்தாலும் இந்த வையகம் இதுவரை கண்டிராத உன்னத சக்தி வாய்ந்தது உழைக்கும் மக்களின் போராட்டம் ஒன்றுதான். ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டிருக்கும் பாட்டாளிகளை விடுதலை செய்வதும், உரிமைகளை மீட்பதும் காப்பதும் இதன் வரலாற்றுக் கடமையாகும், இதன் வெற்றி சர்வ நிச்சயமே,'' என முடியும் அந்தக் கவிதை, ஜாக்டோ-ஜியோ எதிர் கொள்ள உள்ள போராட்டச் சூழ்நிலையோடு பொருந்திப்போகிற ஒன்றாகும்.

### போராளி உருவாவதில்லை, உருவாக்கப்படுகிறான்!

போராட்டம் என்ற ஒன்று வரும்போதுதான் அரசு ஊழியனோ ஆசிரியனோ, ஒன்று காணாமல் போகிறான் அல்லது கண்டெடுக்கப்படுகிறான், இல்லையெனில் வேறொருவன் ஆகிறான், ஒரு கோஷம், ஒரு மறியல், ஒரு கைது, ஒரு விடுதலை, இவற்றின் மூலம், எதுவுமற்றவனாயிருந்தவன் எதிர்காலப் போருக்கான எல்லாத் தடவாளங்களையும் அவனுக்குள் தயாரித்துக்

கொள்கிறான். கரப்பான் பூச்சிக்கு அஞ்சும் அவன்தான் காவல்துறையின் பூட்ஸ் கால்களை ஒரு ஈசலைத் தட்டுவதைப் போல் தட்டுகிறான். சிறைகளுக்குள்ள அடைபட்டுக் கிடந்தாலும் விடுதலைக்கான புரட்சிக் கவிதைகளை எழுதும் கவிஞனாகிறான், ஒரு துளி வியர்வைக்குக் கூட கைக்குட்டையைத் தேடும் அவன், போராட்டங் களில் லத்தி அடியில் உதிர்க்கும் செங்குருதி யைக்கூட பன்னீர்துளிகளைப் போல உணரத் தலைப்படுகிறான்.

அடக்குமுறை ஏவும் அரசாங்கத்தின் பார்வையி லிருந்து ஒளிந்துகொள்ளும் முயல்போல் ஒதுங்கிக் கிடந்தவன் சிலபோராட்ட அனுபவங்களுக்குப் பின் சிங்கம்போல சீறி எழுகிறான். போராட்டங்கள் பழையவனை சாகடிக்கிறது, போராட்டங்கள் அவனது அன்றாடங்களை மாற்றியமைக்கிறது. போராட்டங்கள் தான் நாடுகளைக் கட்டமைக்கிறது. போராட்டங்கள்தான் இப்போதைய தலைமுறைக்கான இருப்பையும் எதிர்காலச் சந்ததிக்கான நெருப்பையும் அடைகாத்து வைக்கிறது. எனவே போராட்டம் மட்டுமே உரிமைகளை மீட்டெடுப்பதற்கான வழி. உணர்வுகளை மதிப்பதற்கான மொழி. அந்த லட்சியத்தை அடைவதற்காகத்தான் ஜாக்டோ-ஜியோ கூட்டமைப்பு மீண்டும் ஒரு போராட்ட களத்திற்கான ஆயத்தப் பணிகளை மேற்கொண் டிருக்கிறது.

## இது உரிமைக்கான போராட்டம்!

2016ஆம் ஆண்டு முதல் நாம் ஊதிய நிலுவை மற்றும் ஊதிய முரண்பாடுகள் சரி செய்யப்படுவதற்காக தொடர்ந்து போராடி வருகிறோம். இந்த போராட்டங்கள் என்பவை ஊதிய மாற்றத்தின் அர்த்த அடர்த்தியுடன் ஊதியங்கள் வழங்கப்பட வேண்டியதன் அவசியத்தை உணர்த்தும் சட்டப்படியான உரிமைக்கான போராட்டங்களாகும். இந்திய அரசியலமைப்பு சட்டப்படி நியாய ஊதியங்களை அரசாங்கங்கள் வழங்காமல், அவற்றுக்குள் நுழைந்து நிலுவைகளை கொடுக்க மறுப்பதும், ஊதியங்களை குறைப்பதும் அத்துமீறிய செயல்களாகும். நியாயப்படியான தேவைகளை, மறுக்காமல் கொடுக்கும் கடமையும் பொறுப்பும் ஆட்சியாளர்களுக்கு உண்டு. அதை விடுத்து, வேலியே பயிரை மேய்ந்த கதையாய், ஆட்சியாளர்களே அரசு ஊழியர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் அநீதிகள் இழைத்தால் அந்தகைய ஆட்சி யாளர்கள் நிர்வாகத் திறன் அற்றவர்களாகவும், மக்களுக்கான அரசை நிர்வகிக்க முடியாதவர்களாகத் தான் இருக்க முடியும்.

## நம் பலம் போராட்டம் பலவீனம் அடிமைத்தனம்!

நம்மிடமும் சில குறைகள் உண்டு. நாம் எல்லோரும் தேர்தலில் ஒரு குறிப்பிட்ட கட்சிக்கு வாக்களிப்பதில்லை அவரவர் விருப்பப்படி அவரவர் விரும்பிய கட்சிக்கோ, வேட்பாளருக்கோ வாக்களிக்கிறோம். ஆனால் அரசியல்வாதிகளை பாருங்கள், அவர்களில் யார் ஆட்சிக்கு வந்தாலும் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் உரிமைகளை பறிக்கும் வேலையில் வேறுபாடு காட்டாமல் ஒற்றுமையாகச் செயல்படுகிறார்கள். எதிர்க்கட்சியாக இருக்கும்போது அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நியாயங்களை பேசும் இந்த ஜாம்பவான்கள், அரியணை ஏறிவிட்டால் அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அற்பப்பதராக நினைத்து தூர வீசி விடுகிறார்கள். நேரில் சென்று முறையீடு செய்வதற்குக்கூட அனுமதிக்க மறுக்கிறார்கள். இருந்தபோதும், இதுகாறும் நாம் அவர்களைத்தான் மாற்றி மாற்றி அரியணையில் ஏற்றி அழகு பார்த்து பார்த்து இளிச்சவாயர்கள் பட்டம் சூட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த பலவீனத்தை மாற்றினால் தவிர நாம் நம்முடைய உரிமைகளுக்கு நவாப் ஆக இருக்க முடியாது.

## இடைவிடாத போராட்டங்கள் மட்டுமே தடைகளைத் தகர்க்கும்!

இப்போதுள்ள மோசமான நிலைமையை நாம் மாற்றாவிட்டால் நமக்கும் நமது சந்ததியினருக்கும் நாம் பெரும் துரோகம் இழைத்துவிட்டவர்களாகி விடுவோம். அரசு ஊழியர்கள் ஆசிரியர்களை அரசு ஏமாற்றும் போக்கை தொடரவிடாமல் அதற்கு தக்க பாடம் புகட்ட வேண்டும். இல்லாவிட்டால் முதன்மை அமைச்சருக்கும், துறை அமைச்சர்களுக்கும், அவர்களின் வீட்டு வாசல்களின் முன்பு காத்துக்கிடந்து, பூங்கொத்து கொடுத்து, அவர்கள் போடும் பிச்சைக் காக வாலாட்டி காத்திருக்கும் அடிமை வாழ்வு வாழ்பவர்களுடன் சேர்ந்து கொண்டு, அரசு எத்தனை சம்பளப் பிடித்தங்கள் செய்தாலும் நன்றி கூறிக் கொண்டு ஊடகங்களுக்கு பல் இளித்து போஸூம் பேட்டியும் கொடுத்துக் கொண்டிருக்கலாம்.

அரசு நமக்கு உறுதியளித்துள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பபெறும் நடவடிக்கைகள், 21 மாத நிலுவைத் தொகையினை பெறுதல், அரசாணை எண்.56ஐ திரும்பப் பெறுதல், 5000 அரசுப் பள்ளிகளை மூடிவிட அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துதல், ஊதிய முரண்பாடுகளை களைதல், சிறப்புக் காலமுறை ஊதியம், தொகுப்பூதியம், மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு வரையறுக்கப்பட்ட ஊதியம் வரையறுத்தல், அரசுத்துறைகளை தனியார்மயமாக்கும் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்துதல் போன்ற வற்றிற்காக ஒரு மாபெரும் போராட்டக்களத்தில் நின்று நம்முடைய உரிமைகளை போராடிப் பெறுவது என்ற உறுதி யோடு நாம் இருக்கிறோம்.

அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் போராட்டகளம் நிற்போம்-முன்பை விட உறுதி யோடு. அரசின் கரங்களுக்குள் இறுக்கப்பட்டிருக்கும் நம் உரிமைகளை மீட்டெடுப்போம்-முன்பை விட உத்வேகத்தோடு. உரிமைகளை அரசு உறுதி செய்து உத்தரவிடும் வரை போராட்டக்களத்திலிருந்து வெளிவர மாட்டோம் என சபதமேற்போம்-மாறாத நெஞ்சுரத்தோடு. பின்வரும் கோரிக்கைகளுக்காக நாம்

போராட்டக் களம் காணவேண்டியது அவசியமாகியிருக்கிறது:-

* 1.4.2003க்குப் பிறகு பணியில் சேர்ந்தவர் களுக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பங்களிப்புடன் கூடிய ஓய்வூதியத் திட்டத்தினை கைவிட்டு பழைய ஓய்வூதியத் திட்டத்தையே அமல்படுத்திட வேண்டும்.
* இடைநிலை மற்றும் முதுநிலை ஆசிரியர் களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதி, ஆசிரியர்கள், அமைச்சுப் பணியாளர்கள், கண்காணிப்பாளர்கள், தலைமைச் செயலகம் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், களப்பணி யாளர்கள், பல்வேறு துறைகளில் உள்ள தொழில்நுட்ப ஊழியர்கள், ஊர்தி ஓட்டுநர்கள் ஆகியோருக்கான ஊதிய முரண்பாடுகளைக் களைய வேண்டும்.
* சிறப்புக் காலமுறை ஊதியம் பெறும் சத்துணவு, அங்கன்வாடி, வருவாய் கிராம உதவியாளர்கள், ஊராட்சிச் செயலாளர்கள், ஊர்ப்புற நூலகர்கள் மற்றும் பகுதி நேர சிறப்பாசிரியர்கள், தொகுப்பூதியர்கள், கணினி ஆசிரியர்கள் ஆகியோருக்கு வரையறுக்கப் பட்ட ஊதியம் வழங்கப்பட வேண்டும்.
* 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகை அரசு ஊழியர்கள் ஆசிரியர்களுக்கு மறுக்கப் பட்டுள்ளதை உடன் வழங்கிட வேண்டும்.
* அரசாணை எண்.56ல் இளைஞர்களின் வேலைவாய்ப்பினைப் பறிக்கக்கூடியவகையில் வெளியிட்ட பணியாளர்கள் பகுப்பாய்வுக் குழுவினை ரத்து செய்திட வேண்டும்.
* பள்ளிக் கல்வித்துறை மூலமாக வெளியிட் டுள்ள அரசாணை எண்கள்.100 மற்றும் 101 மூலமாக ஒழிக்கப்பட்டுள்ள ஆசிரியர் பணி யிடங்களைக் காத்திடவும், அரசுப்பள்ளிகள் மூடுவதைத் தடுத்திடவும் தமிழக அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்திட வேண்டும்.
* 5000 அரசுப்பள்ளிகளை மூடுவதை உடனடியாகக் கைவிட்டு சமூக நீதியினைப் பாதுகாத்திட வேண்டும்.

மேற்கண்ட கோரிக்கைகளுக்காக

**04.10.2018 ஒரு நாள் ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு போராட்டம் நடத்துவது**

**13.10.2018 சேலத்தில் காலவரையற்ற வேலை நிறுத்த ஆயத்த மாநாடு நடத்துவது**

**27.11.2018 முதல் காலவரையற்ற வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவது**

என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. நம்முடைய போராட்டங்களை ஒடுக்கவும் முடுக்கவும் அரசு நாம் எதிர்பார்த்தபடியே அச்சுறுத்தல்கள் கொடுத்து வருகிறது. எந்த அச்சுறுத்தல்களுக்கும் அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் பயப்பட மாட்டார்கள் என்பதற்கு 4.10.2018ம் தேதி நடந்த ஒட்டுமொத்த தற்செயல்விடுப்பே ஒரு சிறந்த உதாரணமாகும்.

அக்டோபர் 4ம் தேதி நாம் அறிவித்திருந்த ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு ஆட்சியாளர்களை யும் அதிகார வர்க்கத்தையும் அச்சம் கொள்ள வைத்திருக்கிறது. அனுமதியற்ற விடுப்பு எடுத்தால் ஒரு நாள் சம்பளம் பிடித்தம் செய்யப்படும் என்று தலைமைச் செயலாளர் எல்லா அரசு அலுவலகங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பியதோடு மட்டுமல்லாமல் ஊடகங்களிலும் அந்த செய்திகளை திரும்பத் திரும்ப வரக்கூடிய ஏற்பாடுகளைச் செய்து அரசு ஊழியர்களையும் ஆசிரியப் பெருமக்களையும் அச்சுறுத்திப் பார்க்கலாம் என்று திட்டமிட்டது தோல்வியில் முடிந்திருக்கிறது.

வேலை செய்தால் சம்பளம் என்ற கோட்பாட்டை முன்னிருத்தி அரசாங்கம் வெளியிட்ட இந்த சுற்றறிக்கை எல்லோர் மத்தியிலும் நகைப்புக்குள் ளானது. செய்த வேலைக்கே 21 மாத சம்பள நிலுவையை கொடுக்க மறுக்கும் இந்த அரசாங்கம் ஒரு நாள் விடுப்பு எடுப்பதற்கு சம்பளம் கொடுக்க முடியாது என்று கூறுவது வேடிக்கை விநோதமாக சிலாகிக்கப்பட்டது. அரசின் சுற்றறிக்கையை அச்சுறுத்தலை தூக்கி வீசிவிட்டு அதன் நயவஞ்ச கத்தை ஒன்றுபட்ட போராட்டங்களின் மூலம் வென்றுகாட்ட வந்துவிட்டோம் என்பதை அரசு ஊழியர்களும் ஆசிரியர்களும் உணர்த்தியிருக் கிறார்கள்.

ஒன்றுபட்ட வலிமையான ஒரு போராட்டத்திற்கு, போர்க்களத்திற்கு நாங்கள் தயாராகிவிட்டோம் என்பதற்கான டோக்கன் அட்வான்ஸ் தான் இந்த ஒருநாள் ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு என்பதை இப்போது அரசாங்கம் உணர்ந்து கொண்டிருக்கும். 4ம் தேதி நடந்த ஒட்டுமொத்த தற்செயல் விடுப்பு இந்த அரசாங்கத்திற்கு ஒரு எச்சரிக்கை செய்தியை அனுப்பி யிருக்கிறது. ''எம் சதையைத் துண்டு துண்டாக வெட்டி நாய்களுக்கும் கழுகுகளுக்கும் இரையாகப் போட்டாலும் எம் உள்ளத்தில் ஏற்றி வைக்கப்பட் டுள்ள உரிமை வேட்கையை அணைக்க இவ்வுலகில் எந்த சக்தியும் இல்லை'' என்று சொன்னானே பாரதி அதே எச்சரிக்கைதான் அது.

தோழர்களே அதே உணர்வோடு, உத்வேகத்தோடு, உறுதியோடு காலவரையற்ற வேலைநிறுத்தத்தை நடத்திக்காட்டி நமக்கான உரிமைகளை வென்றெடுப் போம். ஒன்றுபட்ட சக்தியாக போராட்டக்களம் நிற்போம். எதிர் நிற்கும் தடைகளை உடைத்தெறி வோம். மடைதிறந்த வெள்ளமென படை திரள்வோம் வாருங்கள்.

“தங்களது துன்பங்களை வெறுமனே சகித்துக் கொண்டு போகாமல்

அவற்றை எதிர்த்துப் போராட நமது மக்களுக்குக் கற்றுக்

கொடுக்க வேண்டும் - அவர்கள் தங்கள் உழைப்பை நேசிக்கவும்,

நிமிர்ந்து நிற்கவும், செயலாற்றவும் கற்றுத்தர வேண்டும்.''

- மாக்சிம் கார்க்கி

▼

# போர் வீரனின் அடையாளம் சே

பெரணமல்லூர் சேகரன்

"நெடுங்காலம் புகைந்து
கொண்டிருப்பதை விட
ஒரு கணமேனும்
பற்றி எரிவதே மேல்"

- **சுகுமாறன்**

குவேராவின் குடும்பம் இடதுசாரி சார்பான குடும்பமாக இருந்ததால் மிக இளம் வயதிலேயே அரசியல் தொடர்பான பரந்த நோக்கு இவருக்குக் கிடைத்தது. இவரது தந்தை, சோசலிசத்தினதும், ஜுவான் பெரோனினதும் ஆதரவாளராக இருந்தார். இதனால், ஸ்பானிய உள்நாட்டுப் போரில் ஈடுபட்ட குடியரசு வாதிகள் இவர் வீட்டுக்கு அடிக்கடி வருவதுண்டு. இது சோசலிசம் பற்றிய இவரது கருத்துக்களுக்கு வழிகாட்டியது.

வாழ்க்கை முழுவதும் இவரைப் பாதித்த ஆஸ்மா நோய் இவருக்கு இருந்தும் இவர் ஒரு சிறந்த விளையாட்டு வீரராக விளங்கினார். இவர் ஒரு சிறந்த "ரக்பி" விளையாட்டு வீரர். இவரது தாக்குதல் பாணி விளையாட்டு காரணமாக இவரை "பூசெர்" என்னும் பட்டப் பெயர் இட்டு அழைத்தனர். அத்துடன், மிக அரிதாகவே இவர் குளிப்பதால், இவருக்கு "பன்றி" என்னும் பொருளுடைய சாங்கோ என்ற பட்டப்பெயரும் உண்டு.

தனது தந்தையிடமிருந்து சதுரங்கம் விளையாடப் பழகிய சே குவேரா, 12 ஆவது வயதில் உள்ளூர் சுற்றுப் போட்டிகளிலும் கலந்து கொண்டுள்ளார். வளர்ந்த பின்பும், பின்னர் வாழ்நாள் முழுவதும் இவர் கவிதைகளின் மீது ஆர்வம் கொண்டிருந்தார். நெருடா, கீட்ஸ், மாச்சாடோ, லோர்க்கா, மிஸ்ட்ரல், வலேஜோ, வைட்மன் ஆகியோரது ஆக்கங்கள் மீது இவருக்குச் சிறப்பு ஆர்வம் இருந்தது.

குவேராவின் வீட்டில் 3000 நூல்களுக்கு மேல் இருந்தன. நூல்களை வாசிப்பதில் அவருக்கு இருந்த ஆர்வத்துக்கு இது ஒரு காரணம் எனலாம். இவற்றுள்,மார்க்ஸ், போல்க்னர், கைடே, சல்காரி, வேர்னே போன்றவர்கள் எழுதிய நூல்களில் அவருக்குச் சிறப்பான ஆர்வம் இருந்தது. இவை தவிர நேரு, காப்கா,காமுஸ், லெனின் போன்றவர்களது நூல்களையும், பிரான்ஸ், ஏங்கெல்ஸ், வெல்ஸ், புரொஸ்ட் ஆகியோருடைய



நூல்களையும் அவர் விரும்பி வாசித்தார்.

அவரது வயது அதிகரித்த போது, அவருக்கு இலத்தீன் அமெரிக்க எழுத்தாளர்களான குயிரோகா, அலெக்ரியா, இக்காசா, டாரியோ, ஆஸ்டூரியாஸ்போன்றோருடைய ஆக்கங்களின் பால் ஈடுபாடு ஏற்பட்டது. செல்வாக்கு மிக்க தனி நபர்களின் கருத்துருக்கள், வரைவிலக்கணங்கள், மெய்யியற் கருத்துக்கள் போன்றவற்றை எழுதிவந்த குறிப்புப் புத்தகத்தில் இவர்களுடைய கருத்துக்களையும் அவர் குறித்து வந்தார். இவற்றுள், புத்தர், அரிஸ்ட்டாட்டில் என்போர் பற்றிய ஆய்வுக் குறிப்புக்கள், பேட்ரண்ட் ரஸ்ஸலின் அன்பு, தேசபக்தி என்பன குறித்த ஆய்வு, ஜாக் லண்டனின் சமூகம் பற்றிய கருத்துக்கள், நீட்சேயின் இறப்பு பற்றிய எண்ணங்கள் என்பனவும் அடங்கியிருந்தன. சிக்மண்ட் பிராய்டின் ஆக்கங்களாலும் கவரப்பட்ட சே குவேரா, அவரைப் பல வேளைகளில் மேற்கோள் காட்டியுள்ளார்.

## கல்வி

*1948 ஆம் ஆண்டில் மருத்துவம் படிப்பதற்காக சேகுவேரா, புவனஸ் அயர்ஸ் பல்கலைக் கழகத்தில் சேர்ந்தார். ஆனால் 1951 ஆம் ஆண்டில் படிப்பில் இருந்து ஓராண்டு விடுப்பு எடுத்துக் கொண்டு, அவரது நண்பரான ஆல்பர்ட்டோ கிரெனாடோவுடன் சேர்ந்து கொண்டு, மோட்டார் ஈருளியில் தென்னமெரிக்கா முழுதும் பயணம் செய்தார். பெரு நாட்டில் அமேசான் ஆற்றங்கரையில் இருந்த தொழுநோயாளர் குடியேற்றம் ஒன்றில் சில வாரங்கள் தொண்டு செய்வது அவரது இப்பயணத்தின் இறுதி நோக்கமாக இருந்தது. இப்பயணத்தின் போது அவர் எடுத்த குறிப்புக்களைப் பயன்படுத்தி "மோட்டார் ஈருருளிக் குறிப்புக்கள்" (The Motorcycle Diaries) என்னும் தலைப்பில் நூலொன்றை எழுதினார். இது பின்னர் நியூ யார்க் டைம்சின் அதிக விற்பனை கொண்ட நூலாகத் தெரிவு செய்யப்பட்டது. பின்னர், 2004 இல், இதே பெயரில் எடுக்கப்பட்ட திரைப்படம் விருதுகளையும் பெற்றது.*

*பரவலான வறுமை, அடக்குமுறை, வாக்குரிமை பறிப்பு என்பவற்றை இலத்தீன் அமெரிக்கா முழுதும் கண்ணால் கண்டதினாலும், மார்க்சிய நூல்களின் செல்வாக்கும் ஒன்று சேர ஆயுதம் ஏந்திய புரட்சி மூலமே சமூக ஏற்றத் தாழ்வுகளுக்குத் தீர்வு காண முடியும் என சே குவேரா நம்பலானார். பயணத்தின் முடிவில், இவர், இலத்தீன் அமெரிக்காவைத் தனித்தனி நாடுகளாகப் பார்க்காமல், ஒட்டு மொத்தமான கண்டம் தழுவிய விடுதலைப் போர் முறை தேவைப்படும் ஒரே பகுதியாகப் பார்த்தார். எல்லைகளற்ற ஹிஸ்பானிய அமெரிக்கா என்னும் சே குவேராவின் கருத்துரு அவரது பிற்காலப் புரட்சி நடவடிக்கைகளில் தெளிவாக வெளிப் பட்டது. ஆர்ஜெண்டீனாவுக்குத் திரும்பிய சேகுவேரா தனது படிப்பை முடித்து 1953 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் மருத்துவ டிப்ளோமாப் பட்டம் பெற்றார்.*

*1953 ஜூலையில் மீண்டும் பயணமொன்றைத் தொடங்கிய சேகுவேரா, இம்முறை பொலீவியா, பெரு, ஈக்குவடோர், பனாமா, கொஸ்தாரிக்கா, நிக்கராகுவா, ஹொண்டுராஸ், எல் சல்வடோர் ஆகிய நாடுகளுக்குச் சென்றார். அதே ஆண்டு டிசம்பரில் சேகுவேரா குவாதமாலாவுக்குச் சென்றார். அங்கே மக்களாட்சி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கம் ஒன்றுக்குத் தலைமை தாங்கிய குடியரசுத் தலைவர் ஜாக்கோபோ ஆர்பென்ஸ் குஸ்மான் என்பவர் நிலச் சீர்திருத்தங்களின் மூலமும் பிற நடவடிக்கைகளாலும் பெருந்தோட்ட முறையை ஒழிப்பதற்கு முயன்று கொண்டிருந்தார். உண்மையான புரட்சியாளனாக ஆவதற்குத் தேவையான அனுபவங்களைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் குவேரா, குவாத்தமாலாவிலேயே தங்கிவிட முடிவு செய்தார்.*

*குவாத்தாமாலா நகரில், சே குவேராவுக்கு ஹில்டா கடேயா அக்கொஸ்தா என்னும் பெண்ணின் பழக்கம் கிடைத்தது. இவர் பெரு நாட்டைச் சேர்ந்த ஒரு பொருளியலாளரும், இடதுசாரிச் சார்புள்ள அமெரிக்க மக்கள் புரட்சிகர கூட்டமைப்பு என்னும் இயக்கத்தின் உறுப்பினரும் ஆவார். இதனால் அவருக்கு அரசியல் மட்டத்தில் நல்ல தொடர்புகள் இருந்தன. இவர் ஆர்பென்சின் அரசாங்கத்தின் பல உயரதிகாரிகளைச் சேகுவேராவுக்கு அறிமுகப்படுத்தினார். அத்துடன் பிடல் காஸ்ட்ரோவுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்களும், கியூபாவைவிட்டு வெளியேறி வாழ்ந்துவந்தவர்களுமான தொடர்புகளும் சே குவேராவுக்குக் கிடைத்தன. இக் காலத்திலேயே "சே" என்னும் பெயர் இவருக்கு ஏற்பட்டது. "சே" என்பது நண்பர் அல்லது தோழர் என்னும் பொருள் கொண்ட ஆர்ஜெண்டீனச் சொல்லாகும்.*

## கியூபாவில் புரட்சி

*சில காலத்தின் பின்னர் சே குவேரா தன்னை பிடல் காஸ்ட்ரோவின் போராட்ட இயக்கத்தில் இணைத்துக்கொண்டார். அவ்வியக்கம் 1959 இல் கியூபாவின் ஆட்சி அதிகாரத்தினைக் கைப்பற்றியது. அதன் பின்னர் கியூபாவின் மத்திய வங்கியின் தலைவராக 14 ஆண்டுகள் பணியாற்றி னார். அக்காலகட்டத்தில் கரந்தடிப் போர்முறை பற்றிய பல கட்டுரைகளையும், புத்தங்களையும் எழுதியிருந்தார். 1964 டிசம்பர் 11ம் தேதியன்று கியூபாவின் பிரதிநிதியாக ஐக்கிய நாடுகள் அவையின் 19வது பொது அமர்வில் உரையாற்றி னார். பின்னர், கொங்கோ-கின்ஸாசா (தற்போது கொங்கோ ஜனநாயகக் குடியரசு) மற்றும் பொலிவியா போன்ற நாடுகளின் சோசலிசப் போராட்ட வளர்ச்சிக்கு தனது பங்களிப்பினை அளிப்பதற்காக 1965 ஆம் ஆண்டில் கியூபாவில் இருந்து வெளியேறினார்.*

## பொலிவியாவில் சே குவேரா

சே 1966ம் ஆண்டின் கடைசிகளில் கொரில்லாப் போரை வழி நடத்தும் பொருட்டு உருகுவே நாட்டு போலி பாஸ்போர்ட்டுடன் பொலிவியா நாட்டுக்குள் நுழைந்தார். பொலிவியாவில் சி.ஐ.ஏ மற்றும் அமெரிக்க சிறப்பு இராணுவத்தினது இராணுவ நடவடிக்கை ஒன்றின்போது சே கைது செய்யப்பட்டார்.

## சிம்மசொப்பனமாக விளங்கிய சே

பொலிவிய இராணுவத்தால் வல்லெகிராண்டிற்கு அருகில் உள்ள லா கிகுவேரா என்னுமிடத்தில் கேரி ப்ராடோ சால்மோன் என்பவரின் தலைமையில் அக்டோபர் 9, 1967 இல் சே குவேரா கொல்லப்பட்டார். சாட்சிகள் மற்றும் கொலையில் பங்குபற்றியவர்களிடமிருந்து கிடைத்த தகவலின்படி, சட்டத்தின் முன் நிறுத்தப்படாமல் கொல்லப்பட்டது உறுதிப்படுத்தப்படுகிறது. கைதியாக அகப்பட்டு நின்ற நேரத்தில் கூட இப்படி சொல்லித்தான் மரணத்தை வரவேற்றார்.

"நான் எழுந்து நிற்கிறேன். பிறகு என்னைச் சுடு"

சே என்பது சாதாரண பெயர்ச்சொல் அல்ல, ஒரு இயக்கம்..போராட்ட குணமுள்ள மனிதர்களின் அடையாளம்.

**(சேகுவேரா நினைவு நாள் அக்டோபர் 9)**

# எச்.ராஜாவை கைது செய்யக் கோரி இந்து சமய அறநிலையத் துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் உண்ணாவிரதம்

பாஜக தேசிய செயலாளர் என்று சொல்லிக் கொள்ளும் எச்.ராஜா என்பவர் அரசியலிலோ, மக்களிடமோ துளியும் செல்வாக்கு இல்லாத தனிநபராகவே தெரிந்து வந்த இவர், மதத்தின் பெயரால் இயக்கம் தொடங்கி இருப்பதாக கூறிக்கொண்டு மதத்திற்கு எதிராக செயல்பட்டு வருகிறார். தரம் கெட்டு பேசி பிரபலம் ஆகி விடலாம் என பகல் கனவு காண்கிறார். அதனால்தான் இதுவரை இவரை கண்டு கொள்ளாமல் இருந்தோம். தேர்தல் நெருங்க நெருங்க மதவெறியை தூண்டி பிரிவினைவாதத்தை ஏற்படுத்தும் நோக்கில் பேசி வரும் இவர் அரசுத் துறைகளையும் கடுமையாக பேசி வருவது கண்டிக்கத்தக்கது. இதற்கான எதிர்ப்புகளை இந்து சமய அறநிலையத் துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் தர்ணாவில் ஈடுபட்டோம். தற்போது மதவாதிகள் தன் பக்கம் ஒன்றிணைவார்கள் என நம்பி மக்களை தூண்டிவிட்டு ஒற்றுமையை குலைக்கும் வகையில் மதத் துவேசம், துறைதுவேசம் போன்றவற்றை கையில் எடுத்துள்ளார்.

அரசுத் துறை மற்றும் நீதித்துறையை விமர்சிப்பது நாட்டின் இறையாண்மையை சீர்குலைப்பதற்கு சமம். இவர் இதனை கருத்தில் கொள்ளாமல் சிறுபான்மையினரைக் கொச்சைப்படுத்துவதோடு, இந்து சமய மக்களையும் நீங்கள் இந்துக்கள் இல்லை என தமக்கு எதிராகப் பல சமூகத்தவரை படையெடுக்கும் வகையில் உணர்வுகளை தூண்டிவிட்டு குளிர் காய நினைக்கிறார்.

அதிலும் 17.9.2018 அன்று வேடசந்தூரில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அறநிலையத் துறையில் பணிபுரியும் அலுவலர்களை தரக்குறைவாக திட்டியதோடு, அவர்களின் வீட்டு பெண்களையும் ஆபாசமாக கொச்சை வார்த்தைகளால் பேசியிருப்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. இது இந்து சமய அறநிலையத் துறை அலுவலர்களை மனஉளைச்சலுக்கு ஆளாக்கியுள்ளது. தங்கள் வீட்டு பெண்களை விலை பேசி விற்ற குடும்பத்தில் பிறந்தவர்கள் கூட இவ்வளவு கடுமையான வார்த்தைகளை வார்த்தைகளால் விமர்சிக்க வாய்ப்பில்லை. ஆனால், இவர் அதிலும் கேவலமான குடிபிறப்பாய் பிறந்தவராய் இருக்கக் கூடும் என்று கருதுகிறோம். இவரின அநாகரிக செயல் தமிழகத்தின் ஒற்றுமையை சீர்குலைத்து அரசியல் லாபம் தேடுவதற்கு இதை சந்தர்ப்பமாக்குவது கேவலமான செயல் என்றும். இவரை கைது செய்யும் வரை பணிக்கு திரும்புவதில்லை என்றும் தீர்மானித்து இவர் மீது வழக்கு தொடுக்கவும் அறநிலையத் துறை அனைத்து சங்கங்களின் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.▼

# துணிந்து எழுவோம்
# இணைந்த காரங்களோடு!

மாச்சரியங்களை..
மறப்போம்..

அச்சங்களை..
அறுப்போம்..

துரோக எச்சங்களை
துறப்போம்..

இணைந்த கரங்களோடு..
துணிந்து..
எழுவோம்..

காத்திருப்பு போராட்டம்
நடத்தி..
கைதாகி..

அலுவலக உதவியாளர் முதல்
வட்டாட்சியர் வரை ..
வரிசையில் நின்று..

வேகாத மஞ்சபொடி சோற்றில்..
பசியாற்றி..

தலைமைச் செயலாளரை
நீதிமன்ற படியேற்றி..

சாதித்து பெற்ற..
புதிய ஊதியம்..

சிறை சென்றோர்க்கு.
மட்டுமா கிடைத்தது..

அலுவலகத்தில் அமர்ந்து..
அவதூறு பேசியவர்களுக்கும்..
கிடைத்ததே..

நண்பர்களே..
நாம்.. ஒட்டுண்ணிகளா..?

பிறர்..தியாகத்தை..!!
வியர்வையை..!!!
ருசிக்கும்..
சாறுண்ணிகளா..??

இல்லையே..

கடந்த காலம்..
கடந்ததாகவே..
போகட்டும்..

மாச்சரியங்களை..
மறப்போம்..

அச்சங்களை..
அறுப்போம்..

துரோக எச்சங்களை
துறப்போம்..

இணைந்த கரங்களோடு..
துணிந்து..
எழுவோம்..

குனிந்த சிலரையும்..
நிமிர செய்வோம்..

நண்பர்களே..

நமக்கு ..
நம்.மானம் காக்கும்..
உடை இழந்து இருக்கிறோம்..

அதுதான்..
வயதான நம் வருங்காலத்தில்..
ஓய்வூதியம்..

நாம் என்ன செய்ய போகிறோம்..?????

நம்மீது..
திணிக்கப்பட்ட..
போராட்டம்..
நமக்கல்ல..

நம்..
சந்ததிக்கு...

இன்றைய போராட்டம்..
இழப்பல்ல..

நாளைய நம்..
தலைமுறைக்கான..
சேமிப்பு..



நாம் எப்படி வாழப்போகிறோம்..

சுயநலத்தோடு..
நமக்காகவா..!!

நம்..
தலைமுறைக்காகவா..

நண்பர்களே..

மாச்சரியங்களை..
மறப்போம்..

அச்சங்களை..
அறுப்போம்..

துரோக எச்சங்களை
துறப்போம்..

இணைந்த கரங்களோடு..
துணிந்து..
எழுவோம்

நம்..
உரிமை மீட்போம்..

நம் வயதான..
மரண காலத்தில்..

நம்..
மனசாட்சி.. நம்மை..
வாழ்த்தட்டும்..

**- வாட்ஸ் அப் கவி**

# விழித்தெழு பெண்ணே!

தூக்கம் போதாமல் கொதிக்கும் விழிச்சூட்டில்
வியர்க்கும் முகம் துடைத்து
அவசரமாய் குளித்த தலை துவட்ட நேரமின்றி
மின்சார ரயிலின் வாசல்படியோரம்
தலை சாய்த்து முடியுலர்த்தி போகும்
உழைக்கும் பெண்ணே உனக்கு தெரியுமா?
ஒன்றுபட்ட தொடர் போராட்டத்தில்
உனது பங்கு தொடர்ந்தால் மட்டுமே
எம்.ஆர்.பி.யும், சி.பி.எஸ்.சையும்
ஒழிக்க முடியும் என்று!

கருவறை வரைக்கும்
கைநீட்டி சுரண்டும்
முதலாளித்துவ தீவிரத்தின் இயல்பறிந்தும்
இயன்றவரை என்னால் முடிந்த
வேலைகளை செய்கிறேன் -
போராட்ட நோட்டிசா? பிறகு பார்க்கிறேன்
போராட்டம் நடக்கிறதா? எதிர் சந்தில்
யாரும் பார்த்து விடாமல் செல்கின்றேன் - என
வரம்பிட்டு கொள்ளும் வாழ்க்கை
முறையை தகர்க்காமல்
ஒழித்துவிட முடியுமா?
சிபிஎஸ் என்ற அரக்கனை!

கிணற்று தவளைக்கும்
நிலவோடு உறவுண்டு
மழைக்கால தவளைக்கும்
வெளிகாட்ட குரலுண்டு
கணினி தவளையாய் கட்டளைக்கு தாவி
சும்மா ஓசையில் சகலமும் ஒடுங்கி
கசக்கி பிழியப்படும் - எனதன்பு
மதிப்பூதிய, தொகுப்பூதிய தோழியர்களே
உங்களுக்கு தெரியுமா?
பிடித்தமான அடிமைத்தனத்தில்
அரசு ஊழியர்களை வாழவிடாமல்
நிரந்தர ஊதியத்திலும், ஓய்வூதியத்திலும்
வாழ வைப்பதே தலையாய கடமை என்ற
அரசு ஊழியர் சங்கத்தின் போர்க்குணமிக்க
சங்க நாதத்தோடு - நீங்களும் இணையாமல்
வென்று விட முடியுமா? கோரிக்கைகளை...

எதற்கெடுத்தாலும் எனக்கு நேரமில்லை
இந்த சங்க போராட்டமெல்லாம் பழக்கமில்லை
கொடி பிடித்தல்... கோஷமிடுதல் ஒத்து வராது...
கூட்டமாய் சேர்ந்து நின்றால்
உடம்புக்கு ஆகாது - என்றும்
உறுப்பினர் சந்தாவா? போராட்ட நிதியா?
வீட்டில் கேட்க வேண்டும் என்று
தப்பித்துக் கொள்வதாய்... நினைத்து
வெட்டி பேசி, விலகி நடந்து - உனது
வர்க்க உணர்வை சோதிக்கும் அதிகாரிகளின்
கட்டளைக்கு எதிராக இமைத்தாலே
பணி நீக்கும் அதிகாரம் என நினைத்து
புரையேறினாலும், சங்கவாதியிடம் தண்ணீர் கூட
கேட்க கை நீட்டாமல் தானே தலையில்
அடித்துக்கொண்டு
தனியே ஒதுங்கும் பயம் கொண்ட தோழியரே!

அடுத்த வேளை என்னாகுமோ?
கிடைத்த வேலை நிரந்தரமாகுமோ?
என எப்போதும் பயத்தில்
ஏ.சி. அறையில் கூலியுழைப்பால்
ஜில்லிட்டு கிடக்கும் உன் இதயத்தை கேள்
சொல்லும்... உன்னோடு இணைந்த போராட்டமே
வெற்றியை பெற்றுத் தரும் என்று!

தோழியர்களே!
உலகுக்கே உணவூட்டும் விவசாயம் காத்திட
எட்டாக்கனியாக மாறிவரும் - அரசின்
கல்வியையும், சுகாதாரத்தையும் பாதுகாத்திட
இயற்கை வழங்கும் குடிநீரை பெற்றிட
டாஸ்மாக் நடத்தும் அரசாங்கமே
பாஸ்மார்க் போட்டிட ஆசிரியர் வேண்டாமா?
என்று கேட்டிட, பெற்ற பிள்ளைகளின்
வேலை வாய்ப்புக்கு உத்தரவாதமளித்திட
அரசாணை 56-ஐ நீக்கிட
மொத்தத்தையும் முதலாளிகளுக்கு காசாக்கிவிட்ட
இந்த அரசை எதிர்த்திட
சொல்லணி, பொருளணி - ஏகதேச உருவக
அணி...
இன்னும் எத்தனை அணியிருந்தாலும்...
அரசு ஊழியர் - ஆசிரியர்களின் -
மகளிரணி போல் மகத்தான அணி வேறு உண்டா
என மாநிலமே வியந்திட
வீறு கொண்டு எழுந்து
விரட்டிடுவோம் அவலத்தை!

பங்கேற்போம் அக்டோபர் 4-ல் ஒரு நாள்
தற்செயல் விடுப்பு போராட்டம் மற்றும்
நவம்பர் புரட்சியின் அட்சாரமாய் 27 முதல்
ஜாக்டோ-ஜியோவின் காலவரையற்ற
வேலைநிறுத்தம்
பெண் உழைக்கும் வர்க்கமே
உன் முன்னணி போல்
உலகை கவிதையாக்கும் ஓர் அணியுமுண்டோ
விடுதலை வேட்கையுடன்
விழித்தெழு பெண்ணே
மீண்டும் ஒரு சுதந்திர போரை வெல்ல!

- **எஸ்.தமிழ்ச்செல்வி**

# எச்.ராஜா என்றொரு எச்.ஐ.வி.கிருமி!

சட்டத்திற்கு முன் அனைவரும் சமம் என்பது சாமான்ய பொதுமக்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் தான் என்பது மீண்டும் மீண்டும் அதிகாரம் கொண்டுள்ள அரசியல்வாதிகளால் நிரூபிக்கப்பட்டு வருகிறது. ஒரு சாதாராண பொதுஜனம் பொது அமைதிக்கு பங்கம் ஏற்படும் வகையில் பேசினாலோ நடந்து கொண்டாலோ அவரைப்பிடித்து 75 சட்டப்பிரிவின் கீழ் வழக்கு போடும் காவல்துறை, ஒரு அதிகாரம் கொண்ட அரசியல் கட்சியின் பிரமுகர், பொதுமக்கள் அனைவரும் முகம் கோணும் வகையில் பேசினாலோ நடந்து கொண்டாலோ வழக்கு பதிவு செய்யக்கூட அஞ்சுவதும், அவதூறாகப் பேசியவரின் பேச்சை அந்த அரசியல் கட்சியைச் சேர்ந்த பிற தலைவர்கள் நியாயப்படுத்துவதும், அரசியல் சாசனம் உறுதிசெய்துள்ள மக்களாட்சி தத்துவத்தை அரசியல்வாதிகள் அருவெறுக்கத்தக்க வகையில் அசிங்கப்படுத்திவரும் அவலங்களாகும்.

இந்துத்துவா கொள்கைகளில் ஊறிப்போன பாரதிய ஜனதா கட்சியின் முக்கிய பொறுப்பில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்கள் தீவிரவாதிகளுக்கு சற்றும் இளைத்தவர்கள் அல்ல என்ற கருத்து இந்தியா முழுவதும் வலுப்பெற்று வருகிறது. அதன் தமிழக பொறுப்பாளராக எச்.ராஜா தான் இருப்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார். அவருடைய பேச்சுக்கள் ஆளும் அரசாங்கத்தை, முதல்வர் பொறுப்பில் உள்ள காவல் துறையை, அரசு அதிகாரிகளை, அரசு ஊழியர்களை, அரசு ஊழியர்கள் வீட்டுப் பெண்களை, பணிக்குச் செல்லும் பெண்களை இழிவாகவும் அவதூறாகவும் சித்தரிப்பதைக் கண்டு தமிழகத்தில் உள்ள பாமரர்கள் முதல் பகுத்தறிவாளர்கள் வரை கொதித்தெழுந்துள்ள நிலையில், அரசை நடத்தும் முதல்வரும், அமைச்சர்களும் கைகட்டி, வாய்மூடி, கண்பொத்தி மௌனம் காப்பது இந்த அரசாங்கத்தை இயக்குவது மக்களால் தேர்ந்தெடுத்த அரசாங்கம் இல்லை என்பதை வெளிப்படையாக தமிழக மக்கள் அனைவருக்கும் உணர்த்தியிருக்கிறது.

அன்று பாரதிய ஜனதாவின் எஸ்.வி. சேகர் பெண் பத்திரிகையாளர்களை விலைமாதர்களாக சித்தரித்துப் பேசியதற்கும், இன்று பாரதிய ஜனதாவின் எச்.ராஜா இந்து அறநிலையத் துறையில் பணியாற்றும் ஊழியர்களின் குடும்பப் பெண்களை இழிவாகப் பேசியிருப்பதற்கும் பாரதிய ஜனதா கட்சியின் எந்தத் தலைவரும் கண்டனமோ வருத்தமோ தெரிவிக்காதது இந்தியப் பெண்கள் மீதான அந்தக் கட்சியின் நிலைப்பாட்டை உறுதிபடுத்தியிருக்கிறது. வேலைக்குச் செல்லும் பெண்கள், பொதுவாழ்வில் ஈடுபடும் மகளிர் அனைவரும் விபச்சாரிகள் என்ற சித்தாந்தம் தான் பாரதிய ஜனதா கட்சியின் கொள்கை என்றால் பெண்களை இழிவுபடுத்தும் பேச்சுக்களை கண்டிக்காத பாரதிய ஜனதா கட்சியின் தலைமையின் மௌனம், அந்தக் கட்சியில் இருக்கும் சுஷ்மா சுவராஜ், நிர்மலா சீதாராமன், தமிழிசை சௌந்தரராஜன், வானதி சீனிவாசன் போன்ற பெண் தலைவர்கள் அந்த சித்தாந்தத்தின் வழி வந்தவர்கள் என்பதை ஒப்புக்கொண்டவர்களாகவே இந்த சமூகம் கருத வேண்டியிருக்கும்.

“எச்.ராஜாவை கைது செய்ய இரண்டு தனிப்படைகளை அமைத்திருக்கிறோம்'' எனக் கூறும் காவல்துறைத் தலைமையும், “அப்படியா? அது எனக்குத் தெரியாது'' என திருக்கடையூரில் பேட்டியளிக்கும் எச்.ராஜாவும், “நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, சட்டம் தன் கடமையைச் செய்யும்'' என்று சொல்லும் அரசாங்கமும் தமிழக பொதுமக்களுக்குக் கிடைத்திருக்கும் அவமான பொக்கிஷங்கள். எஸ்.வி.சேகர், எச்.ராஜா போன்றவர்கள் மீது சட்டம் தன் கடமையை செய்யத் தவறினால் நாளைக்கு ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள் என அனைத்து உயர்பதவிகளை வகிப்பவர்களும் அந்தப் பதவிகளை அவர்கள் வீட்டுப் பெண்களை விலைபேசி வாங்கியவர்கள் என்ற விமர்சனங்களையும் எச்.ராஜா போன்ற இந்துத்துவா தீவிரவாதிகளிடமிருந்து ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை வந்துவிடும்.

எப்போதும் அவதூறான கருத்துக்களை பேசி வரும் எச்.ராஜா, எச்.ஐ.வி. கிருமியை விட ஆபத்தானவர். இயற்கைக்கு மாறான உறவுகளினால் உண்டான எச்.ஐ.வி. கிருமியைப் போல இயற்கைக்கு எதிரான கருத்துக்களால் பிரபலமாகியிருப்பவர் எச்.ராஜா. அதிகாரம் என்ற பாதுகாப்பு கவசம் அவரை எப்படியெல்லாம் பேச

வைத்திருக்கிறது பாருங்கள். வினாயகர் சிலை கரைப்பு ஊர்வலத்திற்கு ஒரு குறிப்பிட்ட இடத்தின் வழியாக ஊர்வலம் செல்ல தடை விதித்திருந்த காவல் துறையை, காவல்துறை தலைவரை சகட்டு மேனிக்கு திட்டியிருக்கும் ராஜா நீதிமன்றத்தையும் விட்டு வைக்கவில்லை. நீதிமன்றத்தின் தகுதியை மூன்றெழுத்து வார்த்தைகளால் விமர்சனம் செய்திருக்கிறார் அவர்.

அறநிலையத்துறை அதிகாரிகள் கோயில் நிலங்களை லஞ்சம் வாங்கிக் கொண்டு விற்பனை செய்கின்றனர் என்ற குற்றச்சாட்டு உண்மைதான் என்ற உறுதி எச்.ராஜாவுக்கு இருந்திருந்தால் அவர் சம்பந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும். அதை விடுத்து இத்தகைய அதிகாரிகளின் நடவடிக்கை அவர்கள் தங்கள் வீட்டுப் பெண்களை விலைபேசி விற்பதைப் போலத்தான் என்ற அருவெறுக்கத்தக்க பேச்சு தேவையற்றதாகும். எச்.ராஜாவின் இந்தப் பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவர் தான் சொன்ன வார்த்தைகளை வாபஸ் பெற வேண்டும் என்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினால் அந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியவர்களையும், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் முன்னால் மாநிலத் தலைவரும். அனைத்துத் துறை ஓய்வூதியர் சங்கத் தலைவருமான தோழர் நெ.இல.சீதரன் அவர்களையும் கைபேசி வாயிலாக மிரட்டியிருக்கிறார் எச்.ராஜாவின் அடிவருடி அடியாள். எச்.ராஜாவினுடைய ரௌடித்தனமான பேச்சுக்கள், கீழ்த்தரமான விமர்சனங்கள், சிறுபான்மை மக்களுக்கெதிரான அணுகுமுறைகள் போன்றவை தமிழக மக்களிடையே கொந்தளிப்பை ஏற்படுத்தி வருகின்றன.

அரசு ஊழியர்கள் மீது அவதூறு பேசியிருக்கும் எச்.ராஜா அதைத் திரும்பப் பெற வேண்டும். அரசு அதிகாரிகளின் வீட்டுப் பெண்களை கொச்சைப் படுத்தியிருக்கும் அவர் தமிழக பெண்களிடம் பகிரங்க மன்னிப்பு கேட்க வேண்டும். நீதித்துறையை துச்சமாக பேசியிருக்கும் ராஜா நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும். இன உணர்வைத் தூண்டிய எம்.எல்.ஏ. கருணாஸ் கைது செய்யப்பட்டிருக்கும் நிலையில் மத வெறியை தூண்டும் பேச்சுக்களையும், மகளிரை இழிவுபடுத்தும் வார்த்தைகளையும் பேசியிருக்கும் எச்.ராஜாவை இன்னமும் கைது செய்யாமல் உலவ விட்டிருப்பதும், நான் எங்கேயும் ஓடி ஒளியவில்லை இங்கேதான் இருக்கிறேன் என்று கூட்டங்களில் கலந்து கொள்ளும் அவரை காவல் துறை கைது செய்யாமல் இருப்பதும் காவல் துறைக்கு கறைபடிந்த வரலாறுகளை ஏற்படுத்திக் கொடுத்துவிடும்.

“அரசன் அன்றே கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்” என்பது தமிழ்ப் பழமொழி. தவறு செய்தவர்களை உடனே தண்டிக்க வேண்டிய அரசன் தெய்வத்தின் பின்னால் ஒளிந்து நின்று கொண்டு இதோ இப்போ இன்னும் கொஞ்ச நேரத்தில் தெய்வம் தண்டித்துவிடும் என்று வீராவேசம் பேசுவது இந்த அரசன் ஒரு “டம்மி பீஸ்’’ என்பதை மக்களுக்கு இன்னும் தெளிவாக பறைசாற்றியிருக்கிறது. அரசன் அன்றே கொல்லாமல் விட்டாலும் அரசு ஊழியர்கள் என்ற அசுரர்கள் வென்று காட்டுவார்கள் என்பதை உலகுக்கு உணர்த்தும் வகையில் அரசு ஊழியர்கள் எச்.ராஜா சட்டத்தின் முன் தண்டிக்கப்படும் வரையில் சமரசமில்லா போராட்டத்தை நடத்துவார்கள். தமிழக வாக்காளர்கள் என்ற தெய்வம் தப்பு செய்தவர்களையும் தண்டிக்க மறுத்தவர்களையும் 2019ஆம் ஆண்டு நின்று கொல்லும். அதற்கு முன்னோடியாக அரசு ஊழியர் சங்கத்தின் போராட்டங்கள் செல்லும். வீம்பு பேசிய வீணன் வீழ்ந்து போனன் என்ற செய்தியை அரசு ஊழியர்கள் மற்றும்ஆசிரியர்கள் நடத்தும் போராட்டங்கள் இந்த நாட்டுக்குச் சொல்லும்.

**- அரஸ்**

## வாசகர் கடிதம்

*கடந்த செப்டம்பர் இதழில் அரசாணை 56ஐ ரத்து செய்யும் மனித நேயமிக்க போராட்டத்தினை சிறப்புடன் வெளிப்படுத்தியமைக்கு நன்றி. கேரள மாநில வெள்ள நிவாரணத்திற்கு ஒரு நாள் ஊதியம் பிடித்தம் செய்ய முதல்வருக்கு கோரிக்கை, கூட்டுறவு சங்கத் தேர்தலில் அரசு ஊழியர் சங்க நிர்வாகிகள் வெற்றி போன்ற தகவல்களும், புதிய அத்தியாயம் படைக்க தயாராவோம், மனிதநேயம் தோற்றதில்லை நிதி குவிகிறது அரசு ஊழியர்களிடம், பல்கலைக்கழக மானியக் குழு காப்பாற்றப்பட வேண்டும் போன்ற பிரசுரிக்கப்பட்ட அனைத்து கட்டுரைகளும் சிறப்பாக இருந்தது.*

*- ரா.தட்சிணாமூர்த்தி,*
*கடலூர்*

# செப்டம்பர் 5, 2018 டெல்லி பேரணி பயண அனுபவங்கள்

**முனைவர் மதுரை சுகி**

கருத்தாலும், கரத்தாலும் உழைக்கும் தொழிலாளர்களை இணைத்து உழைப்புச் சுரண்டலுக்கு எதிராகவும், புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்திடக் கோரியும், தொழிலாளர் நலச் சட்டங்களை முடக்குவதை கைவிடக் கோரியும் செப்டம்பர் 5, 2018 புதுடெல்லியில் மிகப் பிரம்மாண்டமான பேரணியை நடத்துவதென அனைத்து தொழற் சங்கங்களின் கூட்டமைப்பு முடிவின்படி அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம் எடுத்த முடிவினை அமுல்படுத்தும்வண்ணம் தமிழகத் தின் அனைத்து மாவட்டத் தலைநகரங்களி லிருந்தும் ரயில், விமானம், பேருந்து என அனைத்து தளங்களையும் முழுமையாய் பயன்படுத்தி 500-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர்கள் சீறிவரும் காளையென டெல்லி பயணத்தில் பங்கேற்றனர். அதில் சென்னை விட்டு டெல்லி தலைநகர் நோக்கி செப்டம்பர் 2 அதிகாலை 5.15 மணிக்கு எமது மகத்தான பயணத்தை மாநிலப் பொருளாளர் எம்.தங்கராஜ், மாநில நிர்வாகிகள் ஆர்.பன்னீர்செல்வம், எம்.சௌந்தரராஜன் ஆகியோர் தலைமையில் 162 பேர் சென்னை சென்ட்ரலிலிருந்து துவக்கினோம்.

அனைவரது பயணமும் செப்டம்பர் 2-ல் துவங்கினாலும் எனது பயணம் செப்டம்பர் 1-ல் மாலை 4.30 மணிக்கு அரும்பாக்கத்திலிருந்து துவங்கியது. சென்னை சென்ட்ரலிலிருந்தும், மதுரை மாநகரிலிருந்தும் அரசு ஊழியர் வரலாற்றில் தனிப்பேருந்த அல்ல, தனி ரயில் பெட்டியை வாடகைக்கு எடுத்து பயணம் செய்யும் முதல் பயணம் என்பதால் ஐஆர்சிடிசி யின் புக்கிங் அலுவலகம் சென்று அதற்குரிய முழுக் கட்டணமும் செலுத்தி பயணச் சீட்டுகளைப் பெறுவதற்கான முன்முயற்சியால் மாலை ஐந்து மணிக்கே பயணம் துவங்கிய தெனலாம். பயணச்சீட்டு பதிவு முடிந்து மாநிலப் பொருளாளர், சுகாதார செவிலியர் சங்க மாநிலத் தலைவர் மற்றும் மாநில நிர்வாகிகளுடன் ஓர் காபி அருந்திவிட்டு சங்கத் தலைமைக் கட்டிடம் சென்று தங்கலாம் என்று சென்றால் அங்கே தென் சென்னை மாவட்ட நிர்வாகிகள் பயணத்தின் போது தேவையான நான்கு வேளை உணவுக்கு சேப்பாக்கம் மணி மெஸ்ஸில் தயாரிப்புப் பணிகள் நடைபெறுகின்றன. அதனைப் பார்வை யிட்டு ஆலோசனை செய்திட வேண்டுமென பணித்ததால் அங்கே சென்று ஆவன செய்து திரும்புகையில் இரவு 12 மணி. அதன்பின் இரவு உறக்கம் அதிகாலை 3.00 மணிவரை தொடர்ந்தது. அன்று முதல் செப்டம்பர் 8 வரை இரவுத் தூக்கம் 12 மணி என்றானது. அதிகாலை 3 மணிக்கு எழுந்து 3.30 மணிக்கு இரண்டு வேன்களில் நமது தோழர்களை ஏற்றி சென்ட்ரலில் இறங்கி அனைத்தையும் ஒழுங்குபடுத்தி உணவை ஏற்றுவதற்காக காத்திருந்தால் 5.15 வண்டி புறப்படும் நிலையில் 4.45 மணிக்கு உணவு வண்டி வந்து சேர்ந்தது. ரயில்வே போர்ட்டர் தொழி லாளர்கள் அனைத்தையும் கண்ணிமைக்கும் நேரத்தில் ஏற்றி தனித்தனியாகப் பிரித்து நமது சிறப்பு போகியிலும் பொதுப் பயணிகளின் எஸ்.5 போகியிலும் ஏற்றி முடிந்தவுடன் பயணம் துவங்கவும் சரியாக இருந்தது.

செம்பம்பர் 2-ல் அதிகாலை 5.15 துவங்கிய பயணம் அன்று முழுவதும் தொடர்ந்தது. எஸ்3, எஸ்4, எஸ்5, எஸ்6, எஸ்7, பி1 ஆகிய ஆறு பெட்டிகளில் நமது தோழர்கள் 61 பேர் பயணம் செய்தோம். அதில் 35-க்கும் மேற்பட்டோர் பயணச் சீட்டுகள் ஆர்ஏசி என்ற நிலையிலேயே தொடர்ந்தது. அதை சமாளிக்க ஐந்து பெண் தோழர்களை சிறப்பு பெட்டிக்கு அனுப்பி 10 சீட்டுகளை உறுதி செய்து பெண் தோழர்களுக்கும் வயதானவர்களுக்கும் மாற்று ஏற்பாடு செய்யப் பட்டது. அதுவல்லாமல் ரயில் முழுவதும் கேரளா, தமிழகம் என பேரணிக்கு வந்தவர்களின் முகங்களாகவே இருந்தது. அதில் கோவை சிஐடியு தோழர்களிடமிருந்து மூன்று இடங்கள் கேட்டுப் பெற்று நமது தோழர்களுக்கும் அதுவும் மாற்று ஏற்பாடாக பகிர்வு செய்யப்பட்டது. காலை, மதியம், இரவு, மறுநாள் காலை உணவு என அனைத்துத் தோழர்களுக்கும் உணவினைப் பிரித்து நேராநேரம் வழங்கப்பட்டது. பகல் முழுவதும் பயணம் ஆந்திரா, தெலுங்கானா மாநிலங்களின் பருத்தி, மக்காள்சோளம், துவரை என்ற மானாவாரிப் பயிர்களின் பசுமையை ரசித்த வண்ணமும், கிருஷ்ணா நதியின் நீரோட்டத் தையும் அதனை ஒட்டிய பகுதிகளில் நெல் வயல்களை ரரிசத்த வண்ணமும் எங்களின் பயணம் தொடர்ந்தது. எங்கள் பயணத்தை

நாங்கள் அற்புதமாக ரசித்தோம் எனலாம்.

எங்களோடு பயணம் செய்த ஜம்முவில் ராணுவத்தில் பணிபுரியும் ஆவடியைச் சேர்ந்த சசிவர்ணன் எங்களில் ஒரு தோழராய் மாறிப் போனார் எனலாம். பகலில் பயணம் செய்ததால் ஹைதராபாத் உள்ளிட்ட அனைத்து ரயில் நிலையங்களிலும் நாங்கள் இறங்கி செல்பி எடுத்து அப்டேட் செய்தோம். ரயில் பயணத்தில் ஓர் மோசமான அனுபவம் தொலைதூரப் பயணத்தில் நாம் நமது உடைமைகளையும், உடன் வரும் மகளிரையும் பாதுகாப்பது மிக அவசியம் என்பதை உணர்த்துவதாக அமைந்தது எனலாம். நமக்கு பயணத்தில் மொழி என்பது சிக்கலான நேரங்களில் மிக அவசியமானதென்பதையும் உணர்த்தியது. நமது நண்பர்கள் நாக்பூரில் ஐஸ்கிரீம் சாப்பிட வேண்டுமென்ற ஆவலை தெரிவித்தனர். அதன்பொருட்டு அனைவரையும் தூக்கத்திலிருந்து எழுப்பும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப் பட்டது.

எனவே, இரவு 2.30 மணிக்கு நான் அலாரம் வைத்திருந்தேன். ஆனால், அதற்கு முன்பே நமது பெண் தோழியருக்கு ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் இருவரை ரயில்வே டிக்கெட் பரிசோதகர் உட்கார வைத்துவிட்டுச் சென்ற தாகவும், அவர்கள் தங்களது இருக்கை என தகராறு செய்வதாகவும் தெரிவித்து என்னை எழுப்பினர். அதனால் நான் எழுந்து சென்று டிக்கெட் பரிசோதகரை அழைத்து வந்து நமது பயணச் சீட்டை உறுதிப்படுத்தி ஆக்கிரமித்திருந்த வர்களை அப்புறப்படுத்திவிட்டு இரவு தூங்க முயற்சி செய்தேன். ஆனால் தூங்கவில்லை. எனவே, விழித்திருந்தேன். 2.15 மணிக்கு நாக்பூர் அவுட்டரில் ரயில் நின்றபோது சிலர் நடமாட்டம் வித்தியாசமாகத் தெரிந்ததால் நான் எழுந்து உட்கார்ந்து அவர்களை சென்று பார்த்து எனக்குத் தெரிந்த ஆங்கிலத்தில் ஏன் இரவில் கதவருகில் நிற்கிறீர்கள் என்றேன். அதற்கு அவர்கள் நாக்பூரில் இறங்கப் போவதாக தெரிவித்தனர். அடுத்த ஐந்து நிமிட இடைவெளியில் நின்ற வண்டி சிக்னல் கிடைத்து நகரும்போது கதவருகே படுத்திருந்த திருவண்ணாமலை சிஐடியு பெண் தோழரின் 5 பவுன் நகையை பறித்துக் கொண்டு ஓடும் ரயிலிலிருந்து குதித்து விட்டான். இதனால் ஓர் அசாதாரண சூழ்நிலையில், நாக்பூர் சென் றடைந்தது ரயில். நாங்களும் நாக்பூரில் இறங்கி திட்டமிட்டபடி ஐஸ்கிரீம் சாப்பிட்டோம். அதன்பின்பு நாங்கள் காவலர் உதவியுடன் அந்தப் பெட்டியில் பதிவு செய்யாமல் பயணம் செய்த அனைவரையும் கீழே இறக்கிவிட்டு நமது தோழர்களை அதில் பயணம் செய்திட வைத் தோம். இவ்வாறாக எமது பயணம் தொடர்ந்தது.

மறுநாள் மதிய உணவு எங்களுக்கு ஏஐஎஸ்ஜிஇஎப் ஏற்பாட்டில் இட்டார்சில் உத்திரபிரதேச மாநில சங்கத் தோழர்களால் ஏற்பாடு செய்து வழங்கப்பட்டது. இரவு 11.00 மணிக்கு நிஜாமுதீன் அடைந்த நாங்கள் நிஜாமுதீன் ரயில் நிலையத்தின் முன்பே வரிசையாக நிறுத்தி அனைவருக்கும்உறவு வழங்கி 4.9.2018 அதிகாலை 1 மணிக்கு எங்களின் தங்குமிடம் சேர்ந்தோம்.

4.9.2018 அன்று காலை 9 மணிக்கு ஜெய்ப்பூர் மற்றும் ஆக்ரா செல்வதற்கான பயண ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. நாங்கள் எங்கள் தோழர்களுடன் ஒரு பேருந்தில் ஜெய்ப்பூர் பயணத்தை தொடர்ந்தோம். எங்கள் தோழர்களின் தாமதம் மற்றும் போக்குவரத்து நெரிசல் காரணமாக நாங்கள் ஜெய்ப்பூர் ராணா பிரதாப் மான்சிங் கோட்டையை மாலை 4.30 மணிக்கு அடைந்தோம். கோட்டையை சுற்றி பார்த்துவிட்டு கீழ் இறங்கிட மாலை 6 மணி ஆகியிருந்தது. இதனால் வேறு இடங்கள் ஏதும் பார்வையிட இயலாத சூழலில் இரவு உணவை பயணத்தில் முடித்து இரவு 7 மணிக்கு வழக்கம்போல் அறையை அடைந்தோம்.

5.10.2018 காலை 8 மணிக்கு பேரணிக்கான பேருந்துகளில் ஏறி ராம்லீலா மைதானத்தை நோக்கி புறப்பட்டோம். தோழர்களை இறக்கிவிட்டதால் தோழர் புகழேந்தி கோஷம் எழுப்பி பேருந்திலிருந்து இறங்கிய இடத்தி லிருந்தே பேரணியை நாங்கள் துவக்கினோம். தலையில் உணவுப் பொருட்களும், கையில் உடைகளின் பையையும் சுமந்துகொண்டு விண்ணதிர கோஷம் எழுப்பிய வட இந்திய விவசாயத் தொழிலாளியின் கோஷம் ஆயிரம் அடக்குமுறைகள் வந்தாலும் உழைக்கும் மக்கள் அதை உடைத்தெறிவார்கள் என்ற உறுதியை உலகிற்கு பறைசாற்றும் போர்ப்பரணியாயிருந்தது. மூன்று கிலோமீட்டர் தூரம் நடந்தபின்னர் ராம்லீலா மைதானத்தை எட்டமுடியாத அளவிற்கான ஜனத்திரள்.

அகில இந்திய மாநில அரசு ஊழியர் சம்மேளனம், இந்திய தொழிற்சங்க மையம், அகில இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கம்

மற்றும் அகில இந்திய விவசாயிகள் சங்கம் இணைந்து இந்தியா முழுவதும் திரட்டப்பட்ட உழைக்கும் வர்க்கம் ஐந்து லட்சத்தை தாண்டி திரண்டிருந்தது. இத்தொழிலாளர்கள் எழுப்பும் கோஷம் உலகமயத்தை உடைத்தெறிவதாய் இருந்தது எனலாம். இந்திய தேசத்தின் இயற்கை வளங்களை கொள்ளையடிக்க இந்திய தொழிலாளியின் உழைப்பினைச் சுரண்ட உலக முதலாளிகள் ஒன்றுகூடும்போது, உலகத் தொழிலாளர்களே ஒன்றுகூடுங்கள் என்ற அழைப்பினை ஏற்று மண்ணைக் கிளறும் விவசாயத் தொழிலாளியுடன் மனுக்களை சீரமைக்கும் கருத்துப் போராளியும் இணைவதில் தடையேதுமில்லை என்பதை இப்பேரணி எமக்கு மட்டுமல்ல உலகிற்கே உணர்த்துவதாயிருந்தது.

6.9.2018 டெல்லியின் செங்கோட்டை, தாமரைக்கோவில், இந்திரா பிரியதர்சினி இல்லம், இந்தியா கேட், பிர்லா மந்திர் என இந்திய தலைநகரின் அனைத்து இடங்களையும் எமது தோழர்கள் உல்லாசமாய் பயணம் செய்து உவகை கொண்டனர். இருநாள் மாலையும் கரோல் பார்க் பகுதியில் ஷாப்பிங் பணியும் தொடர்ந்தது.

7.9.2018 அன்று காலை 7 மணிக்கு டில்லியின் முக்கியமான இடங்களான ஹுமாயூன் கல்லறை, ஷாஅர்சா, பாபர் கல்லறை என யுனஸ்கோவில் அங்கீகரிக்கப்பட்ட கட்டிடக்கலை நயங்களை பார்வையிட்ட பின்பு, குரானா குபாலா என்றழைக்கப்படும் ஹுமாயூன் மன்னனின் அரண்மனை, தெய்வீக குளியலறை அவர் பயன்படுத்திய அளப்பரிய நூலகம் என இந்தியக் கட்டிடக் கலையின் தொல்லியல் கூறுகளை நாங்கள் கண்டறிந்ததற்கு முக்கிய காரணம் தொல்லியல் ஆர்வலர் தோழர் டேனியல் ஜெய்சிங்க தூண்டுதலேயாகும். நண்பகல் 12 மணிக்கு மீண்டும் பேருந்தில் ஏறி நிஜாமுதீன் வந்தடைந்த நாக்ங்ள்2.15 மணிக்கு எங்களின் பயணத்தை துவங்கி 9.9.2018 இரவு 11 மணிக்கு சென்னை சென்ட்ரலை வந்தடைந்தோம்.

இந்தப் பயணம் உழைக்கும் வர்க்கத்தின் ஒற்றுமையை உலகிற்கு பறைசாற்றிய பயணம். இது பல புதிய நண்பர்களை தோழமைகளை அறிமுகப்படுத்தியது. பயணம் என்றவுடன் நிதி ஒரு பிரச்சனையாக உள்ளது. நாம் இம்மாவட்டத்திற்கு புதிது. யாரிடம் நிதி வசூல் செய்வது ஒரிரு நண்பர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உறுதி செய்ததில் பெரும்பகுதி உத்தரவாதத்துடன் நின்றுவிட்டது. இன்னும் 2500 மாவட்ட மையத்திற்கு பயணக் கட்டண கடன் என்ற புதிய அனுபவத்தையும் இந்த பயணம் தந்தது எனலாம்.

நிதிப் பிரச்சனை உறுதியல்ல ரயில் பயணச் சீட்டு உள்ளிட்ட பல சிரமங்களைத் தந்த இந்த பயணம்தான் உழைக்கும் மக்களின் ஒற்றுமை, உலகமயத்திற்கெதிரான உழைப்புச் சுரண்டலுக்கெதிரான போர்க்குணம் இன்னும் நீர்த்துப் போய்விடவில்லை என்பதை உரக்கச் சொல்வதாயிருந்தது என்பதே அனுபவமாகும். ▼

## ஜாக்டோ - ஜியோ சார்பில் தர்மபுரியில் நடைபெற்ற தற்செயல் விடுப்பு (அக்.4) விளக்கக் கூட்டம்



மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் எம்.சுருளிநாதன் தமிழக ஆரம்ப பள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்டச் செயலாளர் பொன். ரத்தினம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாவட்ட தலைவர் பி.எம்.கௌரன் ஆகியோர் தலைமை வகித்தனர். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, மாவட்ட மகளிர் துணைக்குழு அமைப்பாளர் பி.எஸ்.இளவேணில், வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்ட துணைத் தலைவர் சரவணன் நில அளவை ஒன்றிப்பின் மாநில துணைத் தலைவர் அண்ணாகுபேரன், சத்துணவு ஊழியர்சங்க மாவட்ட செயலாளர் சி.காவேரி நூலகத் துறை ஊழியர் சங்க மாவட்டசெயலாளர் முனிராஜ், தமிழ்நாடு உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்ட செயலாளர் ச.கவிதா, தமிழ்நாடு ஆரம்பபள்ளி ஆசிரியர் கூட்டணி மாவட்ட செயலாளர் எஸ்.கேசவன் தமிழ்நாடு முதுநிலை பட்டதாரி ஆசிரியர் கழக மாவட்டத் தலைவர் யஷ்வந்ரா ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர்.

## நூல் மதிப்புரை

பெரணமல்லூர் சேகரனின் "நினைவில் நீங்கா நாட்கள்" நூல் பாதுகாக்கப்பட வேண்டிய பெட்டகம். வரலாற்றுத் தடம் பதித்த அந்த 40 நாட்களில் 28 நாயகர்களும், 12 நிகழ்வு நாயகர்களும் அடங்குவர். ஜனவரி தொடங்கி டிசம்பர் முடிய ஏராளமான நாட்கள் நினைவுகூர்வதற்காக உண்டென்றாலும் அவற்றில் முக்கிய 40 நாட்களை தேர்வு செய்திருப்பதும், அதில் உலகம், இந்தியா, தமிழகம் என அனைத்தும் அடங்கியிருப்பதும், அவரின் மனிதம் சார்ந்த விரிந்த உலக கண்ணோட்டத்தை காண்பிக்கிறது.


தோழர்.சேகரன் "என்னுரை"யில் குறிப்பிட்டுள்ளது போல பொதுவாக மனித குல முன்னேற்றமே அந்த 40 நாட்களை தேர்வு செய்ய உந்து சக்தியாக இருந்துள்ளது. ஏற்கனவே பல நூற்கள் அந்த நாயகர்கள் மற்றும் நிகழ்வுகள் குறித்து வந்துள்ள நிலையில் அதன் சாரத்தை பிழிந்தெடுத்து, தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு காலத்தே தரவேண்டிய தேவையை உணர்ந்து, இந்தநூலை கொண்டு வந்திருப்பது மிகுந்த பொருத்தப்பாடுடையது. நூலுக்கு முத்தாய்ப்பாக இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் தோழர் ஜி.ராமகிருஷ்ணன் அணிந்துரை வழங்கியுள்ளார்.

கடுகைத் துளேத் தேழ்கடலைப் புகட்டி குறுகத் தரித்த குறள் என்ற வரிகளுக்கேற்ப, கடலையளந்து ஒரு பிடிக்குள் இந்த கட்டுரைகளை கொண்டு வந்துள்ளார். ஏற்கனவே புதுக்குறள் படைத்த அனுபவம் அவருக்கு கைகொடுத்திருக்கிறது. வரலாறை ஓரளவு முழுமையாக படித்தவர்களுக்கே சுருக்கி கொண் டுவருவதன் கடினம் புரியும். இதைக் கொண்டு வந்திருக்கலாம், அதைக் கொண்டு வந்திருக்கலாம் என்று அவர்கள் கூறக்கூடும். ஆனால் முதன்முதலில் அணுகுபவர்களின் நுகர்வுத் தேவைக்கேற்ப சத்துடன் வழங்கியுள்ள சேகரன் பெரிதும் பாராட்டப்பட வேண்டியவரே!

கட்டுரையில் ஓரிடத்தில் அவரே கூறுவது போல "மறந்து போவது மனித இயல்பு, நினைவூட்டிக் கொண்டே இருப்பது நமது கடமை" என்ற நோக்கத்தை யாவரும் நிறைவேற்ற இந்த நூல் பெரிதும் உதவும். ஒரு கையேடாக ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருக்க வேண்டிய நூல் மட்டுமல்ல, தலைமுறை தலைமுறையாக கையளித்து வர பாதுகாக்கப்பட வேண்டிய நூலாகவும் உள்ளது. படிப்பார்வம் தூண்டப்பட்ட குழந்தைகளுக்கு வரலாற்று ஞானத்தை ஊட்டவும், உலக அளவிலான வரலாற்றுப் போக்குகளை உள்வாங்கவும், எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு பொறுப்புள்ள சமூக மனிதானாக தன்னை உருமாற்றிக் கொள்ளவும் கடமையாற்றும் காத்திரம் மிகுந்ததாகவும் இந்நூல் உள்ளது.

இந்தியர்களுக்கு வரலாற்றுணர்வு குறைவு என்று மேலை நாட்டு அறிஞர்கள் கருதுவதை புறந்தள்ள முடியாது. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ் மொழிக்கு தொல்காப்பிய இலக்கணம் கண்ட தமிழன், எழுத்திலக்கியம் படைக்கும் ஆற்றலுடன், நாகரீகத்தில் சிறந்து விளங்கிய தமிழன், தம் தலைமுறையினரின் வரலாற்றை பதிவு செய்வதின் ஊக்கமற்றுப் போனது, எத்துணை ஊறுவிளைவித்துக் கொ டிருக்கிறது என்பதை அனுபவம் வாயிலாக உணர்ந்து, நாள்தோறும் நாம் அடையும் வேதனையை என்னவென்று சொல்வது? தங்கள் ஆற்றலை படைப்புத் திறனை நூற்றுக்கணக்கான பக்கங்களில் காட்டி கொண்டு வரும் நூல்கள் தேவைதான். ஆனால் அதை விடவும் இதுபோன்று வரலாறுகளின் சாரங்களை விரைவில் படித்துக் கடக்கவும், பின்னர் அதன்மீது ஈர்ப்பு ஏற்பட்டு முழுமையாக படித்து விளக்கம் பெறவும் உதவுகிற எளிமையான சுருக்கமான இதுபோன்ற நூல்கள், டிஜிட்டல் காலத்தின் இன்றியமையா தேவையாகிவிட்டது. அதை உணர்ந்து காலத்தின் தேவையை பூர்த்தி செய்யும் இந்நூலை தமிழ்ச் சமூகம் பெரிதும் வரவேற்கும் என நம்புகிறேன்.

சேகரனின் நீண்டகால தொழிற்சங்க அனுபவமும், அதனூடே அவர் வரித்துக் கொண்ட மார்க்சீய பார்வையும் கட்டுரைகளின் செழுமைக்கு பெருமளவு உதவியுள்ளது. வெறும் விவரங்களாக இல்லாமல் அதனதன் பின்னணிச் சூழலுடன் கூடிய விவரணைகளாகத் தருவது மார்க்சீய பார்வை கொண்டவர்களுக்கே சாத்தியம். கடந்த காலத்தோடு நிகழ்காலத்தை இணைத்து, எதிர்கால பார்வையுடன் இக்கட்டுரைகள் இருப்பதும், வரலாற்று இயங்கியலை முழுமையாக சுவீகரித்திருப்பதையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.




நிறைவாக சேகரனின் "நினைவில் நீங்கா நாட்கள்" நம் நினைவை விட்டகலாமல் என்றும் நிலைத்து நிற்கும் என்பதால் அனைவரின் கையிலும் தவழ வேண்டிய நூலாகும்.

- **வெ.மன்னார்.**

பெறுநர் நாள். 26-09-2018

**காவல்துறை இயக்குநர்,**
**தமிழ்நாடு காவல்துறை, சென்னை-600004**

ஐயா,

ஜாக்டோ-ஜியோ, ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களின் வாழ்வாதாரக் கோரிக்கைகளுக்காக கடந்த இரண்டாண்டுகளாக பல்வேற அறவழிப் போராட்டங்களை முன்னெடுத்து மாநில முழுமைக்கும் நடத்தி வருகிறது. அதன் ஒரு பகுதியாக மதுரையிலும் அப்போராட்டங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திற்குள் நடத்தி வருகிறோம். இவை தவிர பொது வெளிகளில் பேரணி, தர்ணா போராட்டம் மற்றும் மறியல் ஆகிய இயக்க நடவடிக்கைகளுக்கு காவல் துறைக்கு முறையாக கடிதம் வழங்கிய பின்னரே இயக்கங்களை நடத்தி வருகிறோம். மதுரையில் இயக்க நடவடிக்கைகள் அனைத்துமே பெரும்பாலும் தல்லாக்குளம் காவல் சரகத்திற்கு உட்பட்ட பகுதிகளிலேயே நடத்தப்பட்டு வருகின்றது.

பொதுக் கோரிக்கைகளுக்கான போராட்டம் என்றாலும், துறைவாரிச் சங்க இயக்கங்களானாலும் அவைகளில் தோழமைச் சங்கம் என்ற அடிப்படையில் வாழ்த்திப்பேசுவது, அவர்களுக்கு வழிகாட்டுவது, சிறப்பு அழைப்பாளராகக் கலந்து கொள்வது போன்ற நிகழ்வுகளில் பங்கேற்போம். இந்நிகழ்வுகள் அனைத்திலும் கவால்துறைக்கு முழு ஒத்துழைப்பு அளித்தே எங்களது இயக்க நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். இந்நிலையில் கடந்த ஓராண்டுக்கும் மேலாக நாங்கள் எங்களது கூட்டமைப்பின் சார்பாக மாவட்ட அடசியர் அலுவலக வளாகத்திற்குள் நடத்துகின்ற இயக்கங்களானாலும் சரி, உரிய அனுமதி பெற்று வெளியில் நடத்தும் இயக்கங்களானாலும் சரி அவைகளில் பங்கேற்கும் ஆசிரியர்களையும், அரசு ஊழியர்களையும் ஒருமையில் பேசுவது, தகாத வார்த்தைகளால் திட்டுவது, இயக்கங்களை ஒருங்கிணைக்கும் தலைவர்களை மிரட்டுவது, தலைவர்களை குற்றவாளிகளைப் போல் நடத்துவது, பேரணி மற்றும் மறியலில் கலந்து கொள்ளும் பெண் ஊழியர்களை முதுகில் கை வைத்து தள்ளுவது, வாழ்த்திப் பேச வந்த தலைவர்களையும் கைது நடவடிக்கைக்கு உட்டுத்துவது போன்ற அராஜகமான மனிதாபிமானமற்ற முறையில் தல்லாக்குளம் காவல் நிலைய ஆய்வாளர் அவர்கள் ஈடுபட்டு வருகிறார் என்பதை காவல்துறை இயக்குநர் அவர்களின் கவனத்திற்கு கொணர விழைகிறோம்.

கடந்த 20-09-2018 அன்று தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் சார்பாக கோரிக்கைகளை வலியுறுத்தி மாநில முழுமைக்கும் மாவட்டத் தலைநகரங்களில் பேரணி நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. அதற்கான கடிதமும் உளவுப் பிரிவிற்கும், தல்லாக்குளம் காவல் நிலையத்திலும் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் பேரணிக்கு மைக் பயன்படுத்தக்கூடாது என்றும், அவ்வாறு பயன்படுத்தினால் பேரணியை நடத்த அனுமதி மறுக்கப்படும் என்றும் மீறி நடத்தினால் கைது செய்யப்படுவீர்கள் என்றும் சத்துணவு ஊழியர் சங்கத்தின் மதுரை மாவட்டச் செயலாளர் திரு. சோலையன் அவர்களை மிரட்டியுள்ளார். காவல்துறையில் பணியாற்றும் அலுவலர் என்ற அடிப்படையிலும், இயக்கம் நடத்தும் நாமும் அரசு ஊழியர்கள் என்ற அடிப்படையிலும் காவல்துறையுடன் மோதல் போக்கை கடைப்பிடிக்க வேண்டாம் என்ற நோக்கிலும் மைக் ஏதும் பயன்படுத்தாமல் பேரணி அமைதியாக நடந்து முடிந்தது. பேரணியின் முடிவில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பாக திரண்டு வந்திருக்கும் ஊழியர்களுக்கு தகவல்களைச் சொல்லி கலைந்து செல்வது வழக்கம்.

ஆனால் 20.09.2018 அன்று மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் அருகில் பேரணியின் முடிவில் அங்கு வந்த தல்லாக்குளம் காவல் ஆய்வாளர் திரு. பெத்தராஜ் அவர்கள் பேரணி முடிந்தவுடன் கலைந்து செல்ல வேண்டும். பேரணிக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது என்றும், சத்துணவு ஊழியர் சங்கத்தின் மாவட்ட செயலாளர் திரு. சோலையன் அவர்களை உன்னை கைது செய்து கு.ஐ.சு. போட்டுவிடுவேன் என்றும் ஒருமையில் மிரட்டியுள்ளார். அங்கு வாழ்த்திப் பேச வந்திருந்த தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநில நிர்வாகிகளும், மாவட்ட நிர்வாகிகளும் தலையிட்டு இது வரை மதுரையில் காவல்துறை இவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டதில்லை, நாங்கள் எப்போதும் சட்டம்=ஒழுங்குக்கு கட்டுப்பட்டு நடப்பவர்கள், பொது மக்களுக்கு எவ்விதமான இடையூறும் இல்லாமல் கூட்டத்தை நிறைவு செய்து விடுவோம் என்றும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவர்களையும் ஒருமையில் பேசியதோடு உங்களை அனைவரையும் கைது செய்வேன் என மிரட்டும் தொணியில் பேசினார்.

இவ்வாறாக தொடர்ந்து ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்களிடம் விரோதப் போக்கினைக் கொண்டுள்ள மதுரை தல்லாக்குளம் காவல் ஆய்வாளர் திரு. பெத்தராஜ் அவர்களின் நடவடிக்கையை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடத்த திட்டமிட்டுள்ளோம். எனவே தல்லாக்குளம் காவல் ஆய்வாளர் திரு பெத்தராஜ் அவர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு காவல்துறை இயக்குநர் அவர்களை கேட்டுக்கொள்கிறோம். ▼

# தாஜ்மகாலின் தற்காலிக நிலை

எஸ்.தமிழ்ச்செல்வி

சரித்திரம் என்பதே நடந்து போனதை மற்றொரு காலகட்டத்தில் கிடைக்கும் குறைபட்ட சாட்சியங்களை வைத்துக்கொண்டு கோடிட்ட இடங்களை நிரப்புவதுதான். சூழ்நிலை சாட்சியங்களை வைத்துக் கொண்டுதான் நாம் நமது தோழர்களையும், மொகலாயர்களையும் மறுபடி உருவாக்குகின்றோம். அக்காலங்களில் வாழ்ந்த இளவரசிகள் அவர்களில் நாட்டை மதிநுட்பத்துடன் ஆழத் தெரிந்தவர்கள் - போர்த் திறனில் வல்லவர்கள் என்ற பல திறமையுடன் பெண்கள் இருந்தாலும், தாஜ்மகால் போன்ற தற்கால தன்மையின் பின்னணியில் உள்ள உண்மை சரித்திர ஆராய்ச்சியை நிகழ்கால ஆட்சியாளர்கள் (மத்திய பாஜக) மறைத்திடத் துடிக்கும் செயலுக்கு முற்றுப்புள்ளி வைத்திட வேண்டும்.

அக்பர் ராஜபுதன மங்கையை மணந்து இந்து-முஸ்லிம் ஒற்றுமைக்கு முயன்றதும், ஷாஜகான் மும்தாஜ்க்கு தாஜ்மகால் கட்டிதும் வரலாற்று உண்மைகள். ஜஹாங்கீர் மகன் ஷாஜகான்.

ஆக்ரா அரண்மனை வளாகத்துக்குள் ஆண்டுதோறும் அரசகுல பெண்கள் ஏற்பாடு செய்யும் ஒரு சந்தையில் கண்ணாடி பொருட்கள் அடங்கிய ஒரு ஸ்டாலில் பணியிலிருந்தார் பேரழகி அர்ஜூமான் பானு பேகம். ஒரு மாலை நேரம், நெருங்கிய நண்பர்களுடன் ஷாஜகான் அங்கே வருகை தர, அர்ஜூமான் பானுவை பார்த்த விநாடியில் இளவரசரின் இதயம் மெல்லிசை பாடியது. கால்கள் “ஷாம்பெய்ன்” அருந்தியதை போல தள்ளாடின. சமாளித்துக் கொண்டு கடைசியில் இருந்த ஒரு சிறு கண்ணாடி கோப்பையை காட்டி விலை என்னவென்று கேட்டார் ஷாஜகான். அது வெறும் வினா அல்ல. வியூகம் என்பதை புரிந்து கொண்ட அர்ஜூமான் பேகம் வேண்டுமென்றே குறும்பாக “இது கண்ணாடி அல்ல... வைரத்தால் செய்யப்பட்டது. விலை பல்லாயிரக்கணக்கில் ஆகுமே... சமாளிக்க முடியுமா?” என்றவாறு கேட்க, “உன்னை போன்று ஒரு பேரழகியின் கைப்பட்டுவிட்ட பிறகு அது எப்படி வெறும் கண்ணாடியாக இருக்க முடியும்? இந்நேரம் வைரமாக மாறியிருக்கும் என்ற ஷாஜகான் புன்சிரிப்போடு உடனே பணத்தை தந்துவிட்டு கோப்பையை எடுத்துக் கொண்டார். பணத்தோடு இளவரசரின் இதயமும் பறிபோனது.

திருமணம் என்று ஒன்று ஆனபிறகு அரசர்கள் நிதானமாக அந்தப்புரத்தில் ஆரணங்குகளின் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வது வேறு விசயம். ஆனால், ஒரு பட்டத்து இளவரசருக்கு முதலாவதாக நிகழும் திருமணம் முன்கூட்டியே சிந்திக்கப்பட வேண்டிய விசயமாக அப்போது இருந்தது. சில சமயங்களில் ஒரு திருமணத்தின் பின்னணியில் சாம்ராஜ்ய எல்லைகளை விஸ்தரிக்கும் திட்டமும் பின்னிப் பிணைந்திருக்கும் அல்லது எதிரி நாட்டு மீது படையெடுத்து அடிமையாக அந்நாட்டு இளவரசியை சிறை பிடிப்பதும் உண்டு. நேரிடையாக போர் தொடுத்து இளவரசர்களை வென்ற இளவரசிகளும் (பெண்களும்) உண்டு ஆனால், தனது தந்தை ஜஹாங்கிரீடம் சென்று ஷாஜகான் தன் காதலை தெரிவித்தவுடன் ஒரு மறுப்பும் சொல்லாமல் கையை உயர்த்தி திருமணத்திற்கு அனுமதி தந்தார். மகாராணி நூர்ஜஹானின் சொந்த சகோதரரும் தெற்கு இந்தியாவின் முதலமைச்சருமான அஸப்ஃகானின் மகள் அர்ஜூன்மான் பானு பேகம் என்பது குறிப்பிடத்தக்கது.

1612ஆம் ஆண்டு ஹாஜகான் - அர்ஜூமான் பானு பேகம் திருமணம் நடந்தது. மணமகள் பேரரசர் ஜஹாங்கீரை வணங்கி எழுந்தவுடன் இன்றிலிருந்து நீ மும்தாஜ் (அரண்மனையில் முதன்மையானவள்) என்று அழைக்கப்படுவாய் என்று அறிவித்தார் ஜஹாங்கீர் (ஷாஜகானின் தந்தை).

காதலின் முடிவு திருமணம் எனில் அதோடு காதலும் முடிவு பெறுகிறது என்று சொல்லப்படுவது உண்டு. உலக ரீதியில் இன்றளவும் உன்னதமாக உயர்ந்து நிற்கும் காதல் காவியங்கள் மணப்பந்தலில் முடியாதவை என்பதை நாம் மறுக்க முடியாது. இதை அடியோடு பொய்ப்பித்து காட்டினார் ஷாஜகான். இளவரசர் ஷாஜகானின் பதினெட்டு வருட இல்லற வாழ்க்கை பிரமிப்பூட்டும் ஒரு காதல் காவியத்தின் இரண்டாம் பாகமாக தொடர்ந்தது.

வயதில்கூட வித்தியாசம் இல்லாமல் இருவரும் ஒரே வயதுடையவர்கள். மும்தாஜிடம் ஷாஜகான் இறுதிவரை உள்ளத்தால் வயப்பட்டு கிடந்தார் என்கிறது வரலாறு. அதற்கேற்ப இந்த தம்பதிக்கு பிறந்த குழந்தைகள் மொத்தம் பதினாறு. உலகப் புகழ்பெற்ற உலக அதிசயங்களுள் ஒன்றான தாஜ்மகால் உருவாக காரணமாக இருந்தவர். மிகச்சிறந்த ஒரு லட்சிய மனைவியாக திகழ்ந்தவர் மும்தாஜ் என்பதில் யாதொரு கருத்து வேறுபாடும் இல்லை.

முதலமைச்சர், ராஜதந்திரி அஸப்கானின் மகள் என்பதாலோ என்னவோ மும்தாஜிக்கு மதிநுட்பம் நிறையவே இருந்தது. மும்தாஜ் தன் அன்பு வியூகத்துக்குள் அந்த பேரரசரை இருத்தி வைத்து கொண்டார். “அவர் கணவருக்கு நல்ல மனைவியாய், நண்பராய், மந்திரியாய், நல்லாசியனுமாய்” கடைசி வரை வாழ்ந்தவர் மும்தாஜ் பேகம்.

அரசாங்க சட்டங்களோ, அறிவிப்புகளோ, கடிதங்களோ எதுவானாலும் அவை தயாரான பிறகு அந்தப்புரத்துக்கு அனுப்புவதை வழக்கமாக கொண்டிருந்தார் ஷாஜகான். அவரும் அவற்றை

ஆங்காங்கே எடிட் செய்து குறிப்புகளும் எழுதுவதுண்டு. பொதுவாக எவ்வளவுதான் ஆசையென்றாலும் வேலைக்காக வெளியூர் போகும் போதாவது கணவன்மார்கள் மனைவிகளை வீட்டில் விட்டுச் செல்வது வழக்கம். ஷாஜகான் ஷாஜகான் தான் போகும் இடத்துக்கெல்லாம் தன் பிரிய மனைவியையும் கூடவே அழைத்துச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தார் போர்க்களங்கள் உட்பட.

தற்போது முத்தலாக் சட்டம் பெண்களின் கருத்துக்களை கேட்கப்படாமலேயே நிறைவேற்றப்படுகிறது உச்ச நீதிமன்றத்தில். ஆனால், ஷாஜகான் தனது மனைவிக்கு பேச்சுரிமை, எழுத்துரிமை, அரசுரிமை, போர் திறமை அனைத்து உரிமைகளையும் கொடுத்த நல்ல துணைவனாக இருந்துள்ளார்.

1631ஆம் ஆண்டு ஜூலை 7ஆம் தேதி அகமத் நகர், பீஜப்பூர் சுல்தான்களையும் வழிக்கு கொண்டு வருவதற்காக மத்திய இந்தியாவுக்கு படையோடு ஷாஜகான் சென்றிருந்தபோது மும்தாஜ் பதினாலாவது குழந்தையை பெற்றெடுத்தார். (18 ஆண்டு இல்லற வாழ்வில் 14வது குழந்தை என்றால் அப்பெண்ணின் கருப்பை தளர்வு, மருத்துவ வசதிகள் இறப்புக்கு காரணமாக இருந்திருக்கலாம்) பிரசவம் முடிந்த கையோடு மும்தாஜிக்கு திடீரென்று ஜன்னி கண்டது. உடல் தூக்கி போட்டது. வெளியே தளபதிகளுடன் ஆலோசனையில் இருந்தார் ஷாஜகான். தகவல் வந்தவுடனேயே பதறிப்போய் கூடாரத்துக்கு ஓடிவந்த மன்னர், அருமை மனைவியை "ஹோவென்று" அழுதுகொண்டே வாரி மடியில் இறுத்திக் கொண்டார். சில நிமிடங்கள் கணவரின் கரத்தை இறுகப் பற்றிக் கொண்டிருந்த மும்தாஜின் தலை சாய்ந்தது. பிரம்மை பிடித்தவர் போல் துவண்டு சரிந்து வீழ்ந்து கதறினார் ஷாஜகான். சில நாட்களில் திகைப்பூட்டும் நிகழ்ச்சி ஒன்று நடந்தது. அதுவரை மன்னரின் தலையிலும், முகத்திலும் கம்பீரமாக கடுமையாக இருந்த ஷாஜகானின் முடி திடீரென்று பெவள்ளை வெளேர் என்று நரைத்துப் போனது. வரதட்சணை கொடுமைகள் மன்னர் என்ற காரணத்தினாலேயே பல பெண்களை மணப்பது என்ற நிகழ்விலிருந்து ஷாஜகான் முற்றிலும் மாறுபட்ட கருத்துகள் கொண்ட நல்ல ஆட்சியாளனாக விளங்கியுள்ளார்.

அன்பு மனைவியின் அகால மரணம் ஏற்படுத்திய அதிர்ச்சியில் இருந்து ஓரளவு மீளவே ஷாஜகானுக்கு இரண்டாண்டுகள் பிடித்ததாக கூறப்படுகிறது. இரண்டாண்டுகளுக்கு மன்னர் புத்தாடை கூட அணியவில்லையாம். அலங்காரம், வாசனைத் திரவியம். அறுசுவை விருந்து எல்லாவற்றையும் தவிர்த்தார். அவ்வப்போது திடீரென மணிக்கணக்கில் மௌனமாகி போனார். மன்னர் என்ற முறையில் அத்தியாவசிய கடமைகளில் மட்டுமே ஷாஜகான் ஈடுபட்டுள்ளார்.

ஒரு நாள் நெருங்கிய ஆலோசகர்களுடன் அரசர் இருந்தபோது மனைவி பற்றி பேச்சு திரும்புகையில், அப்போது காதலும், துக்கமும், ஆவேசமும் பொங்க அவளுக்காக ஒரு நினைவு மண்டபம் கட்ட வேண்டும் என்று சொல்லி கலங்கினார் ஷாஜகான். தான் காதலித்து கரம் பிடித்த ஒரு பெண்ணுக்கென அற்புதமான ஒரு கல்லறை கட்ட வேண்டும் என்ற எண்ணம் மனதில் விஸ்வரூபமெடுக்க ஆரம்பிக்கவே, காரியத்தில் இறங்கினார் ஷாஜகான்.

மும்தாஜ் இறந்தது தட்சிண பிரதேசத்தில் பர்ஹான்பூர் என்னும் ஊரில். அங்கே தற்காலிகமாக புதைக்கப்பட்ட அவருடைய உடல் ஆறு மாதங்கள் கழித்து ஆக்ராவுக்கு இன்று தாஜ்மஹால் அமைந்துள்ள இடத்துக்கு பெரும் ஊர்வலமாக கொண்டு வரப்பட்டது. சரியாக 1 ஆண்டு கழித்து தாஜ்மகால் கட்டிடப் பணிகள் துவங்கின. அதற்கென யமுனை கரையில் ஒரு அழகான இடம் மன்னரால் தேர்தெடுக்கப்பட்டது. அங்கே இருந்த மிகப்பெரிய தோட்டம் ராஜபுத்திர மன்னர் ஜெய்சிங்குக்கு சொந்தமானது. அந்தத் தோட்டத்தை கறையாக வாங்க விரும்பினார் ஷாஜகான். முதலில் 2 கோடி ரூபாய் விலையாக தர நினைத்தவர், பணமாக தந்தால் நட்பு முறைக்கு களங்கம் வந்துவிடும் என்று எண்ணி, நான்கு அழகான அரண்மனைகளை நண்பர் ஜெய்சிங்கிற்கு தந்து பண்ட மாற்றம் செய்து கொண்டார்.

உடனே ராஜவேகத்தில் பணிகள் தொடங்கின. சில நாட்களுக்குள் 20 ஆயிரம் வேலையாட்கள் வந்திறங்கினர். கூடவே தேர்ந்த சிற்பிகள், கட்டிடக் கலைஞர்கள் மற்றும் தோட்டக்கலை நிபுணர்கள் வந்தனர். தாஜ்மாகாலுக்கு வரைபடம் தயாரித்து தந்தவர் வெனிஸ் நகர பொற்கொல்லர் மற்றும் சிற்பியான வெரோனியோ என்ற துருக்கிய கட்டிடக் கலைஞர் உஸ்தாத் இஸா அஃபாண்டி. லாகூரை சேர்ந்த உஸ்தாத் அஹமத் என்று கூறினாலும் தாஜ்மகால் தனிப்பட்ட ஒருவொரு கற்பனை செய்யப்படவில்லை என்பதே உண்மை. ஷாஜகானின் மனதில் பனிப்படலமாக இருந்த அந்த கல்லறைக்கு வடிவம் தந்தது பல ஆயிரம் மேதைகளின் கூட்டு முயற்சியே. ஆனால் ஒவ்வொரு டிசைனையும் நேரடியாக பார்த்து ஓகே சொன்னார் ஷாஜகான் என்பது உண்மை.

கல்லறையாக மட்டுமல்ல ஏராளமான மக்கள் வருகை தரும் ஒரு புனித இடமாகவும் தாஜ்மகால் அமைய வேண்டும் என்று விரும்பினார் ஷாஜகான். அதற்கேற்ப தோட்டங்கள், தங்குமிடங்கள், இசை மேடைகள், கடை வீதி போன்ற எல்லா வசதிகளையும் உருவாக்க ஆணையிட்டார். மொகலாய ஆட்சிக் காலத்தில் முஸ்லிம்கள் மட்டுமே தாஜ்மகாலில் அனுமதிக்கப்பட்டனர். 1632-ல் வேலை துவங்கி தாஜ்மகால் கட்டி முடிக்க இருபது ஆண்டுகள் பிடித்தன. வெளிப்புறத்தில் சிறுசிறு வேலைகள் 1653 வரை தொடர்ந்தது. வெளிப்புற வாயிலுக்குள் நுழைந்தவுடன் தொலைவில் தெரியும் தாஜ்மகாலை பார்த்தால் இவ்வளவு சிறியதா? என்று தோன்றும். போகப்போக பெரிதாகிக் கொண்டே போய் மிக அருகில் சென்று அண்ணாந்து பார்த்தால் கூரை தெரியாத அளவு

விஸ்வரூபமெடுக்க வேண்டும் என்ற ரீதியில் திட்டமிட்டபடி கட்டப்பட்டது தாஜ்மகால். தாஜ்மகாலை சுற்றி 42 மீட்டர் உயரத்திற்கு நிமிர்ந்து நிற்கும் நான்கு மினார்களையும் வெளிப்புறமாக சாய்த்து காட்டினார்கள் கட்டிட வல்லுநர்கள்.

ஏதாவது விபத்தில் அவை வாழ நேர்ந்தாலும் தாஜ்மகால் மீது விழாது. மகாலில் வெளிப்புறக் கதவுகள் மீதும், சுவர்கள் மீதும் பதிக்க இந்தியா தவிர ரஷ்யா, திபெத், பாரசிகம் என்று பல நாடுகளில் இருந்து வைரம், வைடூரியம், நீலம், கோமேதகம், முத்து, பவளம் என்று வரவழைத்து ஒன்றுவிடாமல் பயன்படுத்தினார்கள். (பிற்பாடு ஆங்கிலேயர் ஆட்சியில் அதிகாரிகள் அவற்றை சுரண்டியெடுத்து சூறையாடியது வேறு விசயம். கல்லறையை சுற்றிலும் சுவர்களில் புனித குர்ஆனிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகளை எழுத்தோவியமாக செதுக்குவதில் உலகிலேயே திறமையான பாரசீகத்தை சார்ந்த அமானாத்கான் என்ற கலைஞரால் செதுக்கப்பட்டு அவரது கையெழுத்தும் உள்ளதை பார்த்திருப்போம்.

தாஜ்மகால் பற்றி ஷாஜகான் சுருக்கமாக எழுதி வைத்த குறிப்பு “இந்த கல்லறையை கற்பனை செய்தவர் எப்படி பூமியில் பிறந்தவராக இருக்க முடியும்? சொர்க்கத்தில் இருந்து வந்த வரைபடம்தான் இது” என்று குறிப்பிட்டுள்ளார். அற்புதமான, தெய்வீகமான இந்த கல்லறை பிற்பாடு வந்த சில பிரிட்டிஷ் ஆட்சியாளர்களுக்கு பொறாமையை தந்தது. லார்டு வில்லியன் பென்டிக் என்பவர் தாஜ்மகாலை இடித்து விடலாம் என்று யோசனை சொன்னார். இதனை கேட்டு மற்ற ஆங்கிலேயே பிரபுக்களே திகைத்து போனார்கள். பிறகு ஒவ்வொரு கல்லாக அகற்றி கப்பலில் ஏற்றி இங்கிலாந்துக்கு அனுப்பலாம். அங்கே ஒரு பெருந் தோட்டத்தில் மீண்டும் பொருத்தி கண்காட்சியாக வைக்கலாம் என்றும் ஆங்கிலேயர்கள் ஆலோசித்தார்கள். நல்லவேளையாக கலையுள்ளம் கொண்ட வைஸ்ராய் கர்சன் பிரபு மேற்கண்ட ஆபத்தான யோசனைகளையெல்லாம் நிராகரித்து தாஜ்மகாலை நல்ல முறையில் பராமரிக்க ஏற்பாடுகள் செய்து அதற்காக சட்டமியற்ற வழிவகை செய்தார். கூடவே கெய்ரோவிலிருந்து பெரிய அழகான தொங்கும் பித்தளை விளக்கு ஒன்றை தன் காணிக்கையாக வாங்கிக் கொண்டு வந்த ஷாஜகான் - மும்தாஜ் ஜோடி கல்லறைகளுக்கு மேல் தொங்கவும் விட்டார். மும்தாஜ் என்ற ஒரு பெண்ணின் அன்பு, வீரம், தைரியம், சட்ட நுணுக்கங்கள், அரசாளும் திறன் என்ற பன்முகத் தன்மையை மதிப்பதாக கூறினார் வைஸ்ராய் கர்சன் பிரபு.

ஆனால், தற்போது இந்தியாவை ஆண்டு கொண்டிருக்கும் மத்திய அரசும், பிரதமர் மோடியும் சிறுபான்மையினரை மதிக்கும் எவ்வித குணமும் இல்லாதவர்களாக பெண்களை அடிமைபடுத்துபவர்களாக பெண்கள் வீட்டிலேயே இருந்தால் பாலியல் வன்முறை ஏன் வருகிறது என்று கேட்பவர்களாக இந்தியாவின் ஒன்பது அதிசயங்களுள் ஒன்றாக விளங்கும் தாஜ்மகாலை நினைவு சின்னத்திலிருந்து நீக்க வேண்டும் என்று வெறிபிடித்தவர்களாக அதனை பராமரிப்பு பணிகளையும் முழுமையாக மேற்கொள்ளாமல் தனியாரிடம் விடுவதற்கு துடிப்பவர்களாக குறிப்பாக அந்த மாநிலத்தின் பெண்களுக்கு எவ்வித பாதுகாப்பும் அற்ற அடிமைகளாக மாற்றிக் கொண்டிருப்பதை கண்டு பாதகம் செய்பவரை கண்டால் மோதி மிதித்து விடு பாப்பா என்ற பாரதியின் கூற்றை நினைவாக்க வேண்டிய காலத்தை உணர்ந்து அணிதிரட்டப்பட்ட, அணிதிரட்டப்படாத அனைத்து தரப்பிலும் பெண்கள் வீறுகொண்டெழுந்து போராட்டப் பதாகையை உயர்த்தி பிடிக்க வேண்டும். ▼

## உனையன்றி யாரிடம் சொல்வேன்....

*உனையன்றி யாரிடம் சொல்வேன்*
*தோழி!*

*அச்சமூட்டும் சூழல்*
*அலுவலகத்தில் எதற்கு?*

*பிறந்தகம் போல்*
*புகுந்தகம் போல்*
*அலுவலகம் மாறாதா?*

*நிழல் மறையும் அந்தியில்*
*பறவைகள் பயணம் முடித்து*
*கூடடைந்த பிறகும்*
*வீடடைய முடியலையே*
*வேலைப்பளு தடுக்குது.*

*விதிமுறையும்*
*நடைமுறையும்*
*விளக்கிச் சொல்ல....*
*கோப்புகள் காட்ட....*

*கண்ணாடி தடுப்பும்*
*திரைச்சீலை மறைப்பும்*
*தனித்தறையும்*
*அதிகாரிகளுக்கெதற்கு?*

*தீர்வொன்று வேண்டி*
*உனையன்றி யாரிடம் சொல்வேன்*
*தோழி!*

**- ஆர்.நடராஜன்**

# புதிய பென்சன் திட்டம் மாயையும் துக்கமும்!

ஆர்.இளங்கோவன்

2018 ஆகஸ்ட் மாதம் 15ம் தேதி இந்திய பிரதமர் மோடி தனது 72வது சுதந்திரதின உரையின்போது மத்திய அரசு ஊழியர்களுக்கு இதோ கீழே கொடுக் கப்பட்டுள்ள அறிவிப்புகளை பிரகடனப்படுத்துவார் என்று தொழிலாளர்களிடத் தில் ஒரு மிகப்பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தனர்.

1. ஓய்வு பெறும் வயது 60லிருந்து 62ஆக உயரும்

2. குறைந்தபட்ச ஊதியம் 18,000 ரூபாயிலிருந்து 21,000 ரூபாய் ஆகவும் பிட்மென்ட் பார்முலா 2.57லிருந்து 3 ஆகவும் உயரும்.

3. புதிய பென்சன் திட்டம் ஒழிக்கப்படும்.

ஆனால், நடந்தது என்ன? குஜராத் தேர்தலின் போது போலவே இப்போது இரண்டா வது முறையாகவும் ஏமாற்றப்பட்டுள்ளோம். மூன்றாம் முறையாக சில ஊடகங்களில் பிரதமர் கண்டிப்பாக மேற்கண்ட அறிவிப்புகளை நாடாளுமன்ற தேர்தலின்போது தெரிவிப்பார் என கட்டியம் கூறுகின்றன. நிரந்தர ஊகத்தில் தொழிலாளர் களை தள்ளுகின்றனர்.

உண்மை என்ன?

6.3.2018ல் மாநிலங்களவையில் கேட்கப்பட்ட கேள்விக்கு பதில் கூறும்போது நிதியமைச்சர் கூறினார். 7வது ஊதியக்குழு பரிந்துரையில் எவ்வித மாற்றமும் இப்போது செய்யப்போவதில்லை" என்று.

பிறிதொரு சமயத்தில், 21.3.2018 அன்று மக்களவையில் கேட்கப்பட்ட கேள்விக்கு மத்திய ஊழியர் துறை அமைச்சர் "ஓய்வுபெறும் வயதைக் கூட்டும் எந்தத்திட்டமும் இல்லை" என்றார். "1.1.2004க்குப் பிறகு வேலையில் சேர்ந்தோருக்கு புதிய பென்சன் திட்டத்தை மாற்றி பழைய பென்சன் திட்டத்தை அமல்படுத்தும்படியான எந்தத் திட்டமும் இல்லை" என்று நிதியமைச்சர் 24.7.2018 அன்று மாநிலங்களவையில் திட்டவட்டமாகக் கூறினார். இதற்குப் பின்பும் சென்டைம்ஸ் மற்றும் பைனான்சியல் எக்ஸ்பிரஸ் மூலமாக தொழிலாளர்களிடையே வதந்தியை பரப்பும் வேலையை பாஜக அடிப்பொடிகளால் திட்டமிட்டு பிரச்சாரம் செய்யப்பட்டு வருகிறது.

## தொழிற்சங்கங்களின் நிலைப்பாடு என்ன?

ஜூலை 11, 2016 நடக்கவிருந்த கால வரையற்ற வேலைநிறுத்தத்தை தள்ளி வைத்து 2 வருடங்களுக்கு மேலாகியும் தேசீய போராட்டக் குழுவுக்கு கொடுத்த 4 மாதத்திற்குள்ளாக தீர்க்கப் படும் என்ற வாக்குறுதியை அரசு நிறைவேற்ற வில்லை.

ஜூலை 7, 2018 என்.ஜே.சி.ஏ. மறுபடியும் கூடி மத்திய அரசுக்கு 18.8.2018 வரை செயல் படுத்துவதற்கு அவகாசம் அளித்தபோதும் ஒன்றும் நடக்கவில்லை. 18.8.2018ம் கடந்து போனது. உனக்கும் பெப்பே, உங்கப்பனுக்கும் பெப்பே என்று அரசு கூறிவிட்டது.

என்.ஜே.சி.ஏ. மீண்டும் 18.8.2018ல் கூடியபோது அனைத்து மத்திய அரசு ஊழியர் களின் மகா சம்மேளனம், காலவரையற்ற வேலை நிறுத்தம் செய்ய தேதி முடிவு செய்ய கூறியபோது வழக்கம் போல் நமது ஏ.ஐ.ஆர்.எப் & என்.எப்.ஐ.ஆர். தலைவர்கள் (போராட்டக்குழு அமைப்பாளரும் தலைவரும்) மேலும் அவகாசம் கேட்டு காலம் தாழ்த்த முடிவு செய்துள்ளனர். இன்றுவரை முடிவு செய்யவில்லை. இதனால் மத்திய அரசு ஊழியர் மகா சம்மேளனம் நவம்பர் 15, 2018 அன்று வேலை நிறுத்தம் செய்யப்போவதாக முடிவு செய்துள்ளது.

ஏ.ஐ.ஆர்.எப்-ம், என்.எப்.ஐ.ஆரும் கால வரையற்ற வேலைநிறுத்தம் செய்ய முடிவெடுத் தால் மகா சம்மேளனம் அதில் சேரும். டி.ஆர்.இ.யு. வும் சேரும்.

புதிய பென்சனுக்கு எதிராக 60 மணி நேர தொடர் உண்ணாவிரதத்தின் போதும், மீண்டும் பொதுச்செயலாளராக தேர்ந்தெடுக்கப்பட்ட போதும் என்.பி.எஸ். ஒழிக்கப்படாவிட்டால் வேலைநிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக மஸ்தூர் பொதுச்செயலாளர் சூளுரைத்தார். எஸ்.ஆர்.இ.எஸ். மற்றும் எஸ்.ஆர்.எம்.யு. உண்மையிலேயே புதிய பென்சன் திட்டத்திற்கு எதிராக போராட நினைத் திருந்தால் இவர்களின் (ஏ.ஐ.ஆர்.எப், மற்றும் என்.எப்.ஐ.ஆர்.) தலைவர்களை வேலைநிறுத்தத் தேதி அறிவிக்க அழுத்தம் கொடுத்திருக்க வேண்டும். ஏன் செய்யவில்லை? நாடாளுமன்ற தேர்தல் எந்த நேரத்திலும் அறிவிக்கப்படும் சமயம் இது. மிகவும் வாய்ப்பான இந்த சமயத்திலும் தவிர்ப்பது ஏன்?

இந்த தொழிலாளர் விரோத அரசு, தொழிலாளர்களை அடக்குமுறைப்படுத்தியும், சாதி, மத அடிப்படையில் பிளவு படுத்தியும் கொடு மைப்படுத்தி வருகிறது. முன்னர் பாஜகவுக்கு ஆதரவு தெரிவித்தவர்களும் இப்போது எதிர்க்க முன்வருகின்றனர். இதற்காக விவசாயிகள், தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள் டில்லியில் செப்டம்பர் 5ல் பெருந்திரள் பேரணியை நடத்தியிருக்கிறார்கள்.

மத்திய தொழிற்சங்கங்கள் செப்டம்பர் 28 டில்லியில் ஒரு நாடு தழுவிய மாநாடு ஏற்பாடு செய்துள்ளன. அதில் முக்கிய இரு கோரிக்கைகளான, புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்தல், ரெயில்வே மற்றும் பாதுகாப்புத்துறையின் தனியார் மயத்தைக் கைவிடல் ஆகியவை உள்ளிட்ட 12 கோரிக்கைகளுக்காக நாடு தழுவிய 2 நாள் வேலைநிறுத்தம் செய்வதற்கான முடிவு செய்யப் படும் என்று கூறியுள்ளன.

என்.எப்.ஐ.ஆர். மற்றும் ஏ.ஐ.ஆர்.எப். உண்மையிலேயே தொழிலாளர் நலனில் அக்கறை இருந்தால் அந்த இரண்டு நாள் வேலை நிறுத்தத் தில் சேரவேண்டும். 2.9.2016 வேலைநிறுத்தத் தில் மத்திய

அரசு ஊழியர்கள் கலந்துகொண்ட போது மத்திய அரசு 26.8.2016 அன்று புதிய பென்சனுக்கும் கிராஜுவிட்டி வழங்க உத்தரவிட்டது. சுண்டுவிரலைக் கூட அசைக்காமல் 26.8.2016ல் தொழிலாளிக்கு மத்திய அரசு அறிவித்த கிராஜுட்டிக்கு DCRG) நாங்கள்தான் காரணம் என இரண்டு பெடரேஷன்களும் (என்.எப்.ஐ.ஆர். மற்றும் ஏ.ஐ.ஆர்.எப்) வெட்கமில்லாமல் மார்தட்டிக்கொள்கிறார்கள்.

## இந்த புதிய பென்சன் திட்டம் ஒழியுமா? பழைய பென்சன் திட்டம் கிடைக்குமா?

1.1.2004குப் பிறகு வேலையில் சேர்ந்த ஒவ்வொரு தொழிலாளியும் கேட்கும் கேள்வி இது. புதிய பென்சன் திட்டத்தில் இந்திய ரெயில்வேயில் உள்ள 6,84,565 (52 சதம்) இந்திய ரெயில்வே தொழிலாளியும் கேட்கும் கேள்வி! தெற்கு ரெயில்வேயில் உள்ள 87,863 பேரில் 53,005 பேர் புதிய பென்சன் திட்டத்தில் உள்ளனர். இது 60 சதம். இப்போது தெற்கு ரெயில்வேயில் 34,000 பேர்கள்தான் பழைய பென்சன் திட்டத்தில் உள்ளனர்.

## பழைய பென்சன் திட்டம்

பழைய பென்சன் திட்டத்தில் குறைந்த பட்சம் 10 வருடம் பணிசெய்து 60 வயதில் ரிடையர் ஆகும்போது சம்பளத்தில் 50 சதம் பென்சன் கிடைக்கும். குறைந்தபட்சமாக ரூ.9000+ DA பென்சனாக கிடைக்கும். பென்சனில் 40 சதம் 12 ஆண்டுக்கு கணக்கிட்டு கம்முடேஷன் என்ற பெயரில் முன்பணமாக பெற்றுக்கொள்ளலாம். 15 வருடங்களுக்குப் பிறகு முழு பென்சன் கிடைக் கும். மீதமுள்ள 15 வருடத்திற்குள் பென்சனர் இறந்துபோனால், கொடுத்த கம்மூடேஷன் தொகை பிடிக்கப்பட மாட்டாது. இது மட்டும் அல்ல, பென்சனர் 80 வயது தாண்டும்போது, கூடுதலாக 20 சதமும், 85 வயதில் 30 சதமும், 90 வயதில் 40 சதமும், 95 வயதில் 50 சதமும் 100 வயதில் 100 சதமும் கூடுதலாக கிடைக்கும்.

பணியிலுள்ளவர்களுக்கு போல ஆண்டுக்கு இருமுறை பென்சனுக்கும் பஞ்சப்படி கிடைக்கும்.

எப்போதெல்லாம் சம்பளக் கமிஷனில் ஊதியம் மாற்றியமைக்கப்படுகிறதோ அப்போதெல்லாம் பென்சனும் மாற்றியமைக்கப்படுகிறது. இது மட்டும் அல்ல. இறந்தால் ஒருஆண்டு சர்வீசுக்கு ஒரு மாத சம்பளமும் ஓய்வுபெற்றால் அரை மாத சம்பளமும் கிராஜுவிட்டி தரப்படுகிறது. உயர்ந்த பட்சம் ரூ.20 லட்சம் தரப்படும்.

குடும்ப பென்சன்:- பணியின்போது இறக்கும் தொழிலாளியின் குடும்பத்துக்கு 10 ஆண்டுகளுக்கு அவரது சம்பளத்தில் பாதி பென்சனாகக் கிடைக்கும். ஓய்வுபெற்றபின் இறந்துவிட்டால் அவரது 67 வயது வரை பாதி சம்பளம் பென்சனாகக் கிடைக்கும். அதன்பின் அவரது சம்பளத்தில் 30 சதம் குறைந்தபட்சம் ரூ.9000 பென்சனாகக் கிடைக்கும். அதற்குப் பஞ்சப்படி உண்டு. மனைவிக்கு அல்லது கணவனுக்கு, பின் குழந்தைகளுக்கு, திருமணமாகாத அல்லது விதவையான, அல்லது விவாகரத்தான பெண் குழந்தைகளுக்கோ உடல் ஊனமுற்ற குழந்தைகளுக்கும் மனநலமில்லாத குழந்தைகளுக்கும் வாழ்நாள் முழுக்க பென்சன் கிடைக்கும். வேலையின்போது ஊனமுற்று வேலையிழந்தால் ஊனமுற்றோர் பென்சன் கிடைக்கும். வேலையின்போது அடிபட்டால் எக்ஸ்ட்ரா ஆர்டினரி பென்சன் என எத்தனையோ உண்டு.

1957க்கு முன்பு காண்ட்ரிபியூட்டரி பிராவிடன்ட் பன்ட் என ரெயில்வேயில் இருந்தது. இதில் 10 சதம் அடிப்படை சம்பளத்தில் இருந்து பிடித்தம் செய்யப்பட்டு, அரசாங்கமும் 10 சதம் போட்டு வட்டி சேர்த்து வைக்கப்பட்டது. ஓய்வுபெறும் போது வட்டியுடன் சேர்த்து மொத்தமும் தொழிலாளிக்கு தரப்பட்டது. இத்துடன் சிறப்பு கான்ட்ரிபியூஷன் என்ற பெயரில் கிராஜிவிட்டிக்கு சமமாகவும் வழங்கப்பட்டது.

1957ல் பென்சன் திட்டம் செயல்பாட்டுக்கு வந்தபோது (16.11.1957ல் இருந்து) அரசு அளித்த 10 சதம் நிறுத்தப்பட்டு அதற்குப் பதில் பென்சன் வழங்கப்பட்டது. வருந்தி வருந்தி தொழிலாளர்களை அழைத்து 31.3.1986 வரை பென்சன் திட்டத்தில் சேருமாறு அழைக்கப் பட்டது. ஆப்ஷன் கொடுக்காதவர்களுக்கு உச்சநீதி மன்ற உத்தரவின்படி எக்ஸ்கிரேஷியா தரப்படு கிறது. 1957 லிருந்து பிராவிடன்ட் பன்ட் நடைமுறையில் இருந்து வருகிறது. 8.33 சம்பளத்திலிருந்து பிடித்தம் செய்யப்பட்டு வட்டியுடன் சேர்க்கப்பட்டு வருகிறது. இதிலிருந்து 15 வருடத்திற்கு குறைவாக சர்வீஸ் இருந்தால் போட்டவர்கள் கடன் பெறலாம். 15 வருடத்திற்கு மேலாக சர்வீஸ் இருந்தால் இறுதியாக எடுத்துக்கொள்ளலாம். மருத்துவ செலவு, திருமணம், கல்வி, வீடு வாங்க பெற்றுக் கொள்ளலாம். எந்த ஆவணமும் சமர்ப்பிக்க வேண்டாம். ஓய்வுபெறும்போது மொத்தப் பணமும் எடுத்துக்கொள்ளலாம்.

## புதிய பென்சன் திட்டம் சொன்னதும் சொல்லாததும்

புதிய பென்சன் திட்டத்தில் பிடித்தம் செய்யப்படும் தொகை வரையறை செய்யப்பட் டுள்ளது. ஆனால், இறுதியில் தொழிலாளிக்கு என்ன பயன் கிடைக்கும் என்பது வரையறை செய்யப்படவில்லை. அது உத்தரவாதமற்றது. ஆனால் பழைய பென்சன்திட்டத்தில் பென்சனுக்காக எந்தத்தொகையையும் பிடித்தம் செய்யப்பட வில்லை. ஆனால், தொழிலாளிக்கு பென்சன், கிராஜுவிட்டி கம்யூட்டேஷன் ஆகியவை வரையறை செய்யப்பட்டுள்ளது.

## அறிமுகம்

பாஜக ஒரு நிர்வாக உத்தரவு மூலம் 22.12.2003ல் புதிய பென்சன் திட்டத்தை 1.1.2004 முதல்

அமல்படுத்தியது. இரண்டாவது காங்கிரஸ் ஐக்கியமுற்போக்கு கூட்டணி அரசு 2013ல் செப்டம்பர் 4 அன்று மக்களவையிலும் செப்டம்பர் 6 அன்று மாநிலங்களவையிலும் பாஜக, அதிமுக, திமுக முதல் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் நிறைவேற்றியது. இடதுசாரிகள் மட்டுமே எதிர்த்து வாக்களித்தனர். இந்தச்சட்டம் பி.எப்.ஆர்.டி.ஏ. ஆக்ட் 2013 ஆகும். இது 1.2.2014 முதல் கெஜட்டில் வெளியாகி சட்டப்படியானது. அதாவது 31.1.2014 வரை என்.பி.எஸ். சட்ட விரோதமானதாக இருந்தது. ஐ.மு.கூட்டணி அரசு இடதுசாரிகளின் ஆதரவுடன் இருந்தவரை அவர்களால் இடதுசாரிகளின் எதிர்ப்பால் சட்ட மாக்க முடியவில்லை. இடதுசாரிகளின் பலம் 2009ல் குறைந்து அவர்களின் தயவின்றி ஆட்சி அமைத்தபோது பாஜக முதலிய கட்சிகளின் ஆதரவுடன் காங்கிரஸ் சட்டமாக்கியது.

## புதிய பென்சன் திட்டம்

இந்த திட்டப்படி மாதம்தோறும் சம்பளம் பஞ்சப்படி சேர்த்து அதில் 10 சதம் பிடித்தம் செய்யப்படும். ஓடும் தொழிலாளர்களின் ரன்னிங் அலவன்சின் பே எலமென்ட்டும் சேர்க்கப்படும். 31.7.2008 வரை வட்டிபோட்டு ரெயில்வேயே வைத்திருந்தது. அதன்பின் பேங்க் ஆப் இன்டியாவிற்கும் இப்போது ஆக்சிஸ் வங்கிக்கும் அனுப்பப்படுகிறது.

மொத்த பணமும் எல்.ஐ.சி, எஸ்.பி.ஐ, யு.டி.ஐ. என்ற மூன்று பென்சன் பன்ட் மேனேஜர் களிடம் பிரித்துத் தரப்படுகிறது. இதில் 15 சதம் பங்குச் சந்தையிலும் 85 சதம் அரசு மற்றும் தனியார் பத்திரங்களிலும் போடப்பட்டுள்ளது. பி.எப்.ஆர்.டி.ஏ. சட்டப்படி கிடைக்கப்போகும் பணத்திற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. SEBI கூறும் 8 விதமான அபாயங்களில் ஒன்று "அசலே பறிபோகும்" என்பதாகும். அதாவது, முதலுக்கே மோசம். இது பரமபத விளையாட்டு போலதான். முதலாளித்துவ நாடுகளில் எப்போதுமே அபாயம்தான்.

நம் கணக்கில் உள்ள பணம் பென்சன் வெல்த் என்று அழைக்கப்படுகிறது. புதிய பென்சன் திட்டத்தில் 60 வயதில் ஓய்வு பெறும் போது பென்சன் வெல்தில் பணம் இருந்தால் இருக்கும் பணத்தில் 60 சதம் பணமாக தொழிலாளிக்குத் தரப்படும். இதற்கு வரி உண்டு. மீதி 40 சதம் ஒரு ஆனுவிட்டி (இன்சூரன்ஸ்) கம்பெனியில் முதலீடு செய்ய வேண்டும். அவர்கள் மாதந்தோறும் ஆனுவிட்டி என்ற பேரில் பென்சன் தருவார்கள். நம் முதலீட்டுக்கு பர்ச்சேஸ் பிரைஸ் என்று பெயர். இது பங்குச்சந்தையில் முதலீடு செய்யப்படும். லாபம் வந்தால்தான் பென்சன் கிடைக்கும். கம்பெனி மூடிவிட்டால் பென்சன் அரோகராதான். குறந்தபட்ச பென்சன் உத்தரவாதம் கிடையாது. இந்த திட்டத்தில் 60 வயதுக்கு முன்பாக விருப்ப ஓய்வு பெற்றால் 20 சதம் தான் கையில் தரப்படும். மீதி 80 சதம் ஆனுவிட்டியில் முதலீடு செய்ய வேண்டும். இதிலிருந்து வரும் தொகை மாதத்திற்கு ஒருமுறை பென்சனாக தரப்படும். பென்சன் வெல்த் 2 லட்சத்திற்கு குறைவாக இருக்கும்பட்சத்தில் மொத்த தொகையும் தொழிலாளிக்குத் தரப்படும்.

## வரி

இந்த 40 சதம் அல்லது 80 சதத்திற்கு வரி கிடையாது என்று கூறப்பட்டிருந்தாலும் ஆனு விட்டி வாங்கும்போது 18 சதம் ஜி.எஸ்.டி. போடப்படும். இந்த 40 சதம், 80 சதம் பர்ச்சேஸ் பிரைஸ் என்று கூறப்படும். எல்.ஐ.சி, ஐ.சி.ஐ.சி.ஐ போன்ற கம்பெனிகள் ஆனுவிட்டி தரும் கம்பெனிகளாகும் நீங்கள் பென்சனுக்காக ஒரு திட்டத்தை தேர்வு செய்கிறீர்கள்.

## ஆனுவிட்டி திட்டங்கள்

1. டிஃபால்ட் திட்டம்

இந்த முறையின்படி வாழ்நாள் முழுவதும் கம்பெனி திவாகாலாமல் இருந்தால் பென்சன் தரப்படும். பென்சனரின் இறப்பிற்குப் பின் கணவன் அல்லது மனைவிக்கு / அதே பென்சன் தொகை வழங்கப்படும். இவர்கள் இருவரின் மறைவிற்குப் பின்னர் யாருக்கும் பென்சன் கிடையாது. விதவை மகளுக்கோ திருமணமாகாத மகளுக்கோ, உடல் ஊனமுற்ற / மனநலம் குன்றிய குழந்தைகளுக்கோ பென்சன் கிடையாது. முதலீடு செய்யப்பட்ட பணம் நாமினிக்கு திரும்பக்கிடைக்கும்.

2. லைஃப் ஸ்கீம் என்று இன்னொரு முறையில் ஓய்வூதியருக்கு வாழ்நாள் வரை பென்சன் கிடைக்கும். அவருடைய மறைவிற்குப் பிறகு பென்சன் நிறுத்தப்பட்டுவிடும். துணைவருக்கோ பென்சன் கிடையாது. பிறகு எங்கே விதவை மகளுக்கும் மற்றவர்களுக்கும் கிடைக்கப் போகிறது. இதில் முதலீடு செய்த பணமும் யாருக்கும் திரும்பக் கிடைக்காது. இதேபோல் மற்ற திட்டத்திலும் முதலீடு செய்த பணம் கிடைக்காது.

## குறைந்தபட்ச பென்சன்

நாம் முதலீடு செய்த கம்பெனி முதலீட்டை வைத்து என்ன செய்கிறது? அதை 100 சத பங்குச்சந்தையில் முதலீடு செய்கிறது. பங்குச்சந்தை மார்க்கெட் சரிந்தால்போட்ட பணம் ஸ்வாகா. குறைந்தபட்ச பென்சனும் கிடையாது. இந்த சட்டத்தை திருத்தி அமைக்கக் கோரியும் இறுதியாக வாங்கிய ஊதியத்தில் 50 சதம் குறைந்தபட்ச பென்சனாக தரக் கூறியும் பாசுதேவ் ஆச்சாரியா, சிபிஐ(எம்) நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றத்தில் முயன்றபோது அரசு நிராகரித்தது. இடதுசாரிகளைத் தவிர மற்ற எல்லா கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்கு எதிராக ஓட்டு போட்டனர்.

இவர்களுக்கு உழைப்பாளியின் வலி தெரியாது. எம்.பி, எம்.எல்.ஏ, மந்திரிகள், நீதிபதிகள் 5 வருடம் பதவியில் இருந்தாலே பென்சன் கிடைத்துவிடுகிறது. ஆனால், 30 வருடம் உழைத்தவனுக்கு 1.4.2004க்கு பிறகு வேலையில் சேர்ந்தவருக்கு பென்சன் கிடையாது.

காலத்தின் கோலம், பேய்கள் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்.

### அடல் பென்சன் யோஜனா

அடல் பென்சன் யோஜனா என்று ஒரு புதிய திட்டத்தை முறைசாரா தொழிலாளர்களுக்கு மத்திய அரசு கொண்டுவந்துள்ளது. மாதந்தோறும் பணம் செலுத்தி ஒருவருக்கு 8.50 லட்சம் சேமிப்பு சேர்ந்தால், அதை ஷேர்மார்க்கெட்டில் முதலீடு செய்து மாதம் ரூ.5000, 60 வயதுக்குப் பின் தருவார்கள். மார்க்கெட் நன்றாக போனால் பென்சன் கூடும். மார்க்கெட் கீழே போனாலும் ரூ.5000த்தை மத்திய அரசு உத்தரவாதம் செய்கிறது. இதில் முதலீடு செய்பவருக்கும் பென்சன், பிறகு துணைவர் / துணைவிக்கும் பென்சன் உண்டு. இருவருக்குப் பின் முதலீடு செய்த பணம் நாமினிக்குத் திருப்பித் தரப்படும்.

இது இப்படி இருக்க, 30 வருடமும் அதற்கு மேலும் உழைக்கும் ரெயில்வே தொழிலாளிக்கு உத்தரவாதமான குறைந்தபட்ச பென்சன் புதிய பென்சன் திட்டத்தில் இல்லை. 11.7.2016 காலவரையற்ற வேலைநிறுத்தம் வாபஸ் பெற்ற பிறகு புதிய பென்சன் திட்டத்தை முறைப்படுத்த ஒரு கமிட்டி அமைத்தது அரசு. புதிய பென்சன் திட்டம் வேண்டாம் என்று தொழிலாளி சொன் னால் அதை முறைப்படுத்தப்போகிறோம் என்றார் கள். ஆனால், அறிக்கை இன்னும் வெளியிடப்பட வில்லை. ஆனால், தகவல்படி அந்த கமிட்டியும் "ரத்து செய்ய முடியாது" என்றும் "குறைந்தபட்ச பென்சன் உத்தரவாதமும் செய்யமுடியாது" என்றும் கூறியுள்ளது.

### எவ்வளவு கிடைக்கும்?

டிபால்ட் திட்டத்தில் ஆனுவிட்டி என்ற பென்சனும் ஒரு லட்சம் முதலீடு செய்தால் மாதம் ரூ.524 கிடைக்கும். அவருக்குப்பின் மனைவி அல்லது கணவனுக்கும் அதே 524 ரூபாய் மாதம் கிடைக்கும். இருவருக்கும் பிறகு முதலீடு செய்யப் பட்ட பணம் நாமினிக்கு கிடைக்கும். இரண்டாவது திட்டத்தில் துணைவிக்கும் பென்சன்கிடையாது முதலீடு செய்த பணமும் பறிமுதலாகும். பென்சன் மட்டும் ஒரு லட்சதிற்கு ரூ.713 மாதம் கிடைக்கும்.

இன்னொரு திட்டத்தில் கிடைக்கும் பென்சன் ரூ.527. துணைக்கு பென்சன் கிடையாது. ஆனால் முதலீடு செய்யப்பட்ட பணம் கிடைக்கும்.

டிபால்ட் திட்டத்தில் எல்.ஐ.சி.யில் முதலீடு செய்து மாதம் 9166 பெறுவதற்கு ஒருவர் ரூ.17 லட்சமும் + 30600 ஜி.எஸ்.டி.யும் கட்ட வேண்டும். இரண்டாவது திட்டத்தில் ரூ.9181 மாதப் பென்சன் பெற ரூ.12,50,000 மும்+ஜி.எஸ்.டி 22,500ம் முதலீடு செய்ய வேண்டும். ஆனால், துணைக்கு பென்சன் கிடையாது. முதலீடு செய்த 12,72,500 பணமும் திரும்ப வராது.

பழைய பென்சன் திட்டத்தில் தொழிலாளி ஒரு பைசா செலவில்லாமல், குறைந்தபட்ச பென்சனாக ரூ.9000 பெறுகிறார். வருடத்திற்கு இருமுறை பஞ்சப்படி உயர்வும் எப்பொழுதெல் லாம் சம்பளக் கமிஷன் வருகிறதோ அப்போ தெல்லாம் பென்சனும் உயரும்.

ஆனால், புதிய பென்சன் திட்டத்தில் பஞ்சப்படி கிடையாது. மார்க்கெட் சரிந்தால் போட்ட பணமும் கோவிந்தா. சமீபத்தில் ஓய்வுபெற்ற ஜெயந்தி ஜே.ஏ.ஏ. அவர்களின் அடிப்படை சம்பளம் ரூ.31,000. கணவரின் மறைவிற்குப் பின் வேலையில் சேர்ந்து 10 வருடம் பணிபுரிந்து அவர் பெற்ற ஓய்வூதியம் என்ன தெரியுமா? 60 சதம் வகையில் ரூ.3.8 லட்சமும் 40 சதம் வகையில் 2.13 லட்சமும் கிடைத்தது. துணைவர் இல்லாததால் இரண்டாவது திட்டத்தில் முதலீடு செய்தார். இதனால் மாதம் ரூ.1200 பெற்று வருகிறார்.

இந்த பெண்மணி பழைய பென்சன் திட்டத்தில் ஓய்வு பெற்றிருந்தால் மாதம் 15,500+பஞ்சப்படி கிடைத்திருக்கும்.

இதே ரூ.15500 மாதம் கிடைப்பதற்கு அவர் புதிய பென்சன் திட்டத்தில் ரூ.21,37,800 முதலீடு செய்ய வேண்டும். அவருக்குப்பின் அந்த முதலீடும் பறிமுதலாகும். ஆனாலும் பஞ்சப்படி கிடைக்காது. பழைய பென்சன் திட்டத்தில் ரூ.15500 + பஞ்சப்படி உத்தரவாதமாகக் கிடைக் கும். பங்குச்சந்தை சரிந்தாலும் பயமில்லை.

### போராட்டங்களுக்குப் பிறகு ஏற்பட்ட முன்னேற்றங்கள்

1.4.2004ல் புதிய பென்சன் திட்டம் வந்ததில் இருந்தே டி.ஆர்.இ.யு. வழக்கம் போல் தொழிலாளர் நலன் கருத்தில் கொண்டு போராடத் துவங்கியது. முதலில் புதிய பென்சன் திட்டத்தில் கிராஜுட்டி கிடையாது. பிராவிடன் பண்ட் சேமிப்பும் கிடையாது. தொழிலாளி இறந்து போனால் கிராஜுவிட்டியும் தொழிலாளி இறந்துபோனால் குடும்ப பென்சனும் எக்ஸ்ட்ரா ஆர்டினர் பென் சனும் கிடையாது. டையர்-1ல் இருந்து பணம் அவசர ஆத்திரத்திற்கு எடுக்க முடியாது. டயர் - 2ல் விரும்பினால் பணம் போடலாம். அதிலிலிருந்து பணம் எடுக்க முடியும்.

### கோர்ட் கேஸ்

கிராஜிவிட்டி சர்வீஸ் ரூலில் இடம் இல்லை எனில் கிராஜிவிடி சட்டப்படி கிராஜுவிட்டி தரவேண்டும். குறைந்தபட்சம் 5 வருடம் சர்வீஸ் முடிந்து வீட்டிற்கு செல்லும் ஒரு தொழிலாளிக்கு இறுதி கால பலனாக கிராஜிவிட்டி தரவேண்டும் என்று டி.ஆர்.இ.யு. வழக்கில் வாதிட்டது.

டி.ஆர்.இ.யு. சென்னை கேட்டில் ஓ.ஏ.575 என்ற எண்ணில் மார்ச் 2011ல் வழக்கு தொடர்ந்தது. மத்திய அரசு ஊழியர்கள் 2.9.2016 வேலைநிறுத்தத்தில் சேர்ந்தனர். இவற்றால் 26.8.2016ல் அரசு டி.சி.ஆர்.ஜி. 1.1.2004ல் இருந்து தர ஒப்புதல் தந்தது. ஏ.ஐ.ஆர்.எப்-ம், என்.எப்.ஐ.ஆரும். இந்த போராட்டத்தில் கலந்து

கொண்டிருந்தால் மேலும் பல முன்னேற்றங் களைக் கண்டிருக்கலாம்.

### குடும்ப ஓய்வூதியம்

பல பக்கங்களில் எதிர்ப்புகள் கண்டனக் குரல்கள் வந்ததால் புதிய பென்சனில் உள்ளவர் இறந்தாலோ ஊனமுற்று வேலை இழந்தாலோ இறந்த தொழிலாளி குடும்பத்திற்கு குடும்ப ஓய்வூதியமும் பென்சனும் தர அரசு ஒத்துக் கொண்டது. 5.5.2009ல் உத்தரவிட்டது. ஆனால் இதற்கு இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகும் தெற்கு ரெயில்வே நிர்வாகம் 2011 வரை எந்த நடவடிக்கை களையும் எடுக்கவில்லை. டி.ஆர்.இ.யு.வின் OA575/2011-ன் சென்னை மத்திய நிர்வாக தீர்ப்பாயம் இடைக்கால ஆணையின்படியே நிலுவையில் உள்ள எல்லா விண்ணப்பங்களும் கையில் எடுக்கப்பட்டு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டது. இப்போது அரசு பென்சன் வெல்த் 100 சதத்தையும் அவர்களிடமும் கொடுத்தால் தான் குடும்ப பென்சன் தரமுடியும் என்கிறது. நாம் 60 சதத்தை திருப்பித் தரவேண்டும். 40 சதம் பென்சனுக்கு எடுத்துக்கொள் என்று வழக்கில் கூறியுள்ளோம்.

இ.பி.எப். சட்டத்தின் கீழ் எல்லா தொழிலாளர்களுக் கும் பி.எப். உண்டு. என்.பி.எஸ். தொழிலாளிக்கு பிராவிடன்ட் பன்டு திட்டம் இல்லை என்றால் இ.பி.எப். சட்டம் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். யாரும் பிராவிடென்ட் பன்ட் இல்லாமல் இருக்கக் கூடாது என்று சட்டம் சொல்கிறது. டி.ஆர்.இ.யு. வழக்கில் இந்த சட்டமும் வாதிடப்பட்டது. இப்போது அரசு 60 சதம் கையில் தருவதை மறுத்து 100 சதத்தையும் ஆனுவிட்டி வாங்க போட வேண்டும் என்று கூற திட்டமிட்டு வருகிறது.

தற்போது என்.பி.எஸ். ல் 3 வருடம் சந்தாதாரராக இருந்தால் சொந்த முதலீட்டில் 25 சதம் சர்வீசில் 3 முறை மட்டுமே குழந்தைகளின் திருமணத்திற்கு, வீடுவாங்க அல்லது சில நோய்களுக்கு பெறமுடியும். ஆனால், ஆவணம் சமர்ப்பிக்க வேண்டும்.

### சட்டவிரோத திட்டம்

என்.பி.எஸ்க்கு எதிரான வழக்கில், கீழ்க்கண்டவாறு டி.ஆர்.இ.யு. வாதிட்டது. என்.பி.எஸ். தொழிலாளியிடம் இருந்து பிடிக்கப்பட்ட 10 சதம் பணமும் அரசின் 10 சதம் பணமும் தொழிலாளிக்கு நேரடியாகத் தராமல், தனியார் வங்கி மூலமாக பங்குச்சந்தையில் போட்டு (சூதாட்டம்) குறைந்தபட்ச பென்சனுக்கு வழிமுறை செய்யாமல் நழுவிக்கொண்டது. என்.பி.எஸ். தொழிலாளியை 60 வயதுக்கு மேல் நடுத்தெருவில் பிச்சை எடுக்க முடிவு செய்து விட்டது. இது, அரசியல் நிர்ணய சட்டப் பிரிவு 114க்கு எதிரானது. இந்த பிரிவின் படி நிர்ணயம் செய்யப்பட்ட பணமும் மாறக்கூடாது. சென்று சேர வேண்டிய பயனீட்டாளரும் மாறக்கூடாது. இது தொழிலாளியின் சொத்து, அவரின் உரிமை, பிச்சையல்ல. அவர்களின் நலனுக்கு எதிராக பயன்படுத்தக்கூடாது. இதையே 1.2.2014ல்தான் புதிய பென்சன் சட்டமானதால் 31.1.2014 வரை வேலைக்கு சேர்ந்த அனைவரும் பழைய பென்சன் திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டுமென்று டி.ஆர்.இ.யு. வாதிட்டுள்ளது.

அரசியல் சட்டத்திற்கு புறம்பாக எந்த சட்டம் இருந்தாலும் நீதிமன்றம் தலையிடமுடியும் என்று அனேக தருணங்களில் உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

### வெல்வோம்

அனைத்து தொழிற்சங்கங்களும் போராடும் நோக்கில்தான் இருக்கின்றன. கடந்த செப்டம்பர் 2, 2015 மற்றும் செப்டம்பர் 2, 2016ல் நடந்த வேலைநிறுத்தத்தில் முறையே 15 கோடி, 18 கோடி தொழிலாளர்கள் கலந்து கொண்டனர். மீண்டும் 2018ல் 2 நாள் வேலை நிறுத்தம் செய்ய திட்டம் உள்ளது. (உலக மயமாக்கல் மற்றும் புதிய பென்சன் திட்டத்தை எதிர்த்து) இதில் ஏ.ஐ.ஆர்.எப் மற்றும் என்.எப்.ஐ.ஆர். சேரவேண்டும். ஏ.ஐ.ஆர்.எப். முன்னாள் தலைவர் உம்ராவ்மல் புரோகித், என்.பி.எஸ். டிரஸ்டியாக இருந்தார். இந்தத் திட்டத்தை மிக நல்லத்திட்டம் என்று புகழ்ந்து கொண்டிருந்தார். இந்த திட்டத்தின் தொழிலாளர் விரோத கொள்கைகளையும் அவர் டிரஸ்டியாக இருப்பதையும் டி.ஆர்.இ.யு. வெளிச்சம் போட்டுக் காட்டியவுடன் டிரஸ்டியில் இருந்து வெளி யேறினார். இதற்காக டி.ஆர்.இ.யு. தலைவர்கள், தொண்டர்கள் மீது வன்முறை ஏவப்பட்டது.

7வருடத்திற்குப் பின் மார்ச் 2011ல்தான் சென்னையில் தங்களுடைய கருத்தரங்கில் என்.பி.எஸ். க்கு எதிராக ஏ.ஐ.ஆர்.எப். தீர்மானம் போட்டது. என்.எப்.ஐ.ஆரும் ஆரம்பத்தில் புதிய பென்சனை ஆதரித்தது. 2012 ஜனவரியில்தான் என்.எப்.ஐ.ஆரும் ஜெல்பாய்குரி மீட்டிங்கில் தீர்மானம் போட்டது.

இடதுசாரிகள் ஆண்ட 3 மாநிலங்களைத் தவிர எல்லா மாநில அரசுகளுக்கும் என்.பி.எஸ். திட்டத்தை அமல்படுத்திவிட்டனர். அவை, கேரளா, மேற்குவங்கம் மற்றும் திரிபுரா. கேரளாவில் காங்கிரஸ் பதவிக்கு வந்ததும் 1.4.2013 முதல் புதிய பென்சனை கொண்டுவந்துவிட்டது. மேற்குவங்கத்தில் திரிணாமூல் காங்கிரஸ் பதவிக்கு வந்தும் இன்னும் பழைய பென்சன்திட்டம் நடைமுறையில் உள்ளது. திரிபுராவில் பாஜக வந்துவிட்டது. புதிய பென்சன் திட்டம் அமலுக்கு வந்துவிட்டது.

அர்ஜென்ட்டினாவிலும் பொலிவியாவிலும் புதிய பென்சன் திட்டம் நடைமுறையில் இருந்தது. உலகமயத்திற்கு எதிரான போராட்டத்திற்கு தலைமை தாங்கிய இடதுசாரிகள் ஆட்சியைப் பிடித்தபிறகு அதை ஒழித்துவிட்டு பழைய பென்சன் திட்டமே வந்துவிட்டது.

இந்தியாவிலும் முதலில் புதிய பென்சன் திட்டத்தை ஆதரித்து வந்தவர்கள் இப்போது எதிர்க்கத் துவங்கியுள்ளனர்.

எனவே, இந்தியாவிலும் பழைய பென்சனை நிச்சயம் வென்றெடுப்போம்.

நன்றி : **டிஆர்இயுவின் தொழிலரசு**

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## ஐடிஐ அலுவலர் சங்கம்

தமிழ்நாடு தொழிற்பயிற்சி அலுவலர் சங்கத்தின் சார்பில் நாகப்பட்டினம் அரசு தொழிற்பயிற்சி மையத்தில் 18.09.18 அன்று பிரச்சார இயக்கக் கூட்டம் கிளைத் தலைவர் சிவகுருநாதன் தலைமையில் நடைபெற்றது.



## தமிழ்நாடு அரசு அனைத்து மருந்தாளுநர் சங்கம்

நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில் மாநிலம் தழுவிய மாவட்டத் தலைநகர் தொடர் முழுக்க போராட்டத்தின் ஒரு பகுதியாக 10.09.18 அன்று காலை நாகை அரசு மாவட்டத் தலைமை மருத்துவமனையில் மாவட்டச் செயலாளர் ஜெ.செல்வராஜ் தலைமையில் தொடர் முழுக்க போராட்டம் நடைபெற்றது.

அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன், வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன், துறைவாரி சங்க நிர்வாகிகள் து.இளவரசன், கே.ராஜு, மேகநாதன், ப.ஜீவானந்தம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மருந்தாளுனர் சங்க மாநிலச் செயலாளர் எஸ்.இராமநாத கணேசன் நிறைவுரையாற்றினார். இறுதியாக மாவட்டப் பொருளாளர் என்.ஜி.பாஸ்கரன் நன்றி கூறினார்.

## சுகாதாரப் போக்குவரத்துத்துறை ஊழியர் சங்கம்

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துத் துறை ஊழியர் சங்கத்தின் 10-ஆவது மாநில மாநாடு திருச்சியை அடுத்த சமயபுரத்தில் சனிக்கிழமை யன்று நடைபெற்றது. மாநிலத் தலைவர் எஸ்.நடராஜன் தலைமை வகித்தார். வரவேற்புக் குழுத் தலைவர் எம்.பி.விவேகானந்தன் வரவேற்றார். தொழில்நுட்ப ஊழியர் சங்கங்களின்



கூட்டமைப்பு மாநில அமைப்பாளர் எம்.வெங்கடேசன் தொடக்கவுரையாற்றினார். பொதுச் செயலாளர் கி.நாகராஜன், பொருளாளர் ப.இராஜாமணி ஆகியோர் அறிக்கைகள் சமர்ப்பித்தனர். மாநில நிர்வாகிகள் ஆர்.லோகிதாசன், என்.ரமேஷ், பி.கணேசன், ஏ.குணசேகரன், வி.கோவிந்தராஜன், எஸ்.கண்ணன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர்.

மாநாட்டில் கலந்துகொண்டு தமிழ்நாடு சுகாதாரப் போக்குவரத்துறை இயக்குநர் எஸ்.நடராஜன் சிறப்புரையாற்றினார். சங்கத்தின் முன்னாள் மாநிலத் தலைவர் இரா.பாலசுப்பிர மணியன் வாழ்த்துரை வழங்கினார். மாநாட்டை நிறைவு செய்து அரசு ஊழியர் சங்க மாநிலத் தலைவர் எம்.சுப்பிரமணியன் உரையாற்றினார். முடிவில் வரவேற்புக்குழுச் செயலாளர் ஜி.தியாகராஜன் நன்றி கூறினார்.

மாநாட்டில் தலைவராக எஸ்.நடராஜன், பொதுச் செயலாளராக கி.நாகராஜன், பொருளாளராக ப.இராஜாமணி, துணைத் தலைவர்களாக ஆர்.லோகிதாசன், பி.கணேசன், என்.ரமேஷ், செயலாளர்களாக ஏ.குணசேகரன், வி.கோவிந்தராஜன், எஸ்.கண்ணன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாகத் தேர்வு வெய்யப்பட்டனர்.

## சுகாதாரத் துறை அலுவலர் சங்கம்

### தர்மபுரி

சுகாதார துறை செயலாளர் சுகவனம் அவர்களின் ஊழியர் விரோத போக்கை கண்டித்து பொது சுகாதாரத் துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் தருமபுரி சுகாதாரத் துறை துணை இயக்குனர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது. மாவட்ட துணைத் தலைவர் நாகராஜ் தலைமை வகித்தார். மாவட்ட



செயலாளர் ஆஸ்ட்ரின் கோரிக்கைகளை விளக்கி பேசினர்.

அரசு ஊழியர் சங்கத்தின் மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் மாவட்ட செயலாளர் ஏ.சேகர், பொருளாளர் கே.புகழேந்தி, துறைவாரி சங்க நிர்வாகிகள் சி.காவேரி, பிரபாகரன், யோகராசு, பெரியசாமி, பழனியம்மாள் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

## நாகப்பட்டினம்

சுகாதாரத் துறை அரசு இணைச் செயலாளர் அ.சுகவனம் பாரபட்சம் காட்டுவதாக சுட்டிக் காட்டியமைக்காக சங்க பொதுச்செயலாளர் ஜெ.லெட்சுமி நாராயணனுக்கு குற்றக் குறிப்பாணை வழங்கியதை கண்டித்தும், 07.05.213 உச்ச நீதிமன்ற தீர்ப்பை முழுமையாக



அமல்படுத்தக் கோரியும் 19.09.18 அன்று மாலை நாகை அவுரித் திடலில் மாவட்டத் தலைவர் எம்.சுப்பிரமணியன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் ஜெ.வெங்கடேசன் விளக்கவுரை யாற்றினார். அரசு ஊழியர் சங்க மாநிலத் தணிக்கையாளர் ஏ.ட்டீ.அன்பழகன் துவக்க வுரையாற்றினார். துறைவாரி சங்க நிர்வாகிகள் ப.அந்துவன் சேரல், பா.ராணி, து.இளவரசன், கே.ராஜு ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பொது சுகாதாரத் துறை அலுவலர் சங்க நிர்வாகிகள் ஆர்.கோகுலநாதன், பி.சரசுராமன், எம்.செந்தில், ஆர்.சந்தானகிருஷ்ணன், டி.ஆர்.செந்தில்நாதன், ஆர்.பாஸ்கர், எஸ்.சங்கர் ஆகியோர் கண்டன உரையாற்றினர். அலுவலர் ஒன்றிய மாநில துணைப் பொதுச் செயலாளர் டி.அமிர்தகுமார் சிறப்புரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் டி.குணசேகரன் நன்றி கூறினார்.

## திருவாரூர்

மாவட்ட பேரணியில், TNGEA வட்ட, மாவட்ட, மாநிலம் மற்றும் துறைவாரிச் சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர்.



## நாகப்பட்டினம்

மாவட்டத் தலைவர் வி.தேன்மொழி தலைமையில் 21.09.18 அன்று மாபெரும் கவன ஈர்ப்பு பேரணி நாகை கோட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து புதிய பேருந்து நிலையம் வரை 1900-க்கும் மேற்பட்ட சத்துணவு ஊழியர்கள் பங்கேற்புடன் நடைபெற்றது.

அரசு ஊழியர் சங்க மாநில தணிக்கையாளர் ஏ.ட்டீ.அன்பழகன் பேரணியை துவக்கி வைத்தார். மாவட்டச் செயலாளர் கே.ராஜு விளக்கவுரையாற்றினார்.

மாநில செயற்குழு உறுப்பினர் சி.வாசுகி, துறைவாரி மற்றும் தோழமை சங்க நிர்வாகிகள் எம்.காந்தி, சொ.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.மதிவாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புள்ளியியல் சார்நிலை அலுவலர் சங்க மாநில பொதுச்செயலாளர் ப.அந்துவன் சேரல் நிறைவுரையாற்றினார்.

மாவட்ட நிர்வாகிகள் எஸ்.கலைச்செல்வன், என்.புகழேந்தி, என்.வளர்மதி, பி.அருள்மொழி, எஸ்.கிருஷ்ணமூர்த்தி, வி.சித்ரா, எம்.இராஜேந்திரன், கே.பாலாம்பாள் மற்றும் அனைத்து ஒன்றியத்தின் நிர்வாகிகளும் பேரணியில் பங்கேற்றனர். இறுதியில் மாவட்டப் பொருளாளர் எஸ்.துர்க்காம்பிகா நன்றி கூறினார்.

## எய்ட்ஸ் கட்டுப்பாடு ஊழியர் சங்கம்

22.3.18 அன்று ஈரோடு மாவட்ட அரசு ஊழியர்கள் சங்க அலுவகத்தில் எய்ட்ஸ்



கட்டுப்பாடு அனைத்து ஊழியர் சங்க முதல் மாவட்ட மாநாடு நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு மாவட்ட தலைவர் ரீனா தலைமை வகித்தார். மாநில தலைவர் கருப்புசாமி, மாநில செயலாளர் சேரலாதன், மாநில துணைத்தலைவர் அமல்தாஸ் மற்றும் சேலம் மாவட்ட தலைவர் ஜெகஜோதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள். தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாவட்ட தலைவர் பாஸ்கர் பாபு கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

இம்மாநாட்டில் புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவராக ரீனா, செயலாளராக அல்லாபிட்சை, பொருளாளராக மாலதி, துணை தலைவர்களாக ரமேஷ், சுசீலா, துணை செயலாளர்களாக சாந்தி, முருகன், செயற்குழு உறுப்பினர்களாக ஸ்ரீதர், சித்ரா, ஹெலன், சித்ராபிரியா, சுமன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாநாட்டில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## சத்துணவு ஊழியர் சங்கம்

## தருமபுரி

சத்துணவு ஊழியர்களுக்கு ஊதியக் குழுவில வரையறுக்கப்பட்ட ஊதியம் மற்றும் ஓய்வூதியம் வழங்க வேண்டும் உள்ளிட்ட 10 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் முழுவதும் கவன ஈர்ப்பு பேரணி நடைபெற்றது,

மாவட்டத் தலைவர் சி.எம்.நெடுஞ்செழியன் தலைமை வகித்தார். முன்னதாக பேரணியை அரசு ஊழியர்சங்க மாவட்ட தலைவர் எம்.சுருளிநாதன் துவக்கிவைத்தார். மாநில துணைத் தலைவர் கே.அண்ணாதுரை, மாவட்டச் செயலாளர் சி.காவேரி, மாவட்டப் பொருளாளர் கே.ராஜா, மாவட்ட நிர்வாகிகள், பாபு, வளர்மதி, மகேஸ்வரி, அனுசுயா ஆகியோர் கோரிக்கையை விளக்கிபேசினர்.

அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஏ.சேகர் பொருளாளர் கே.புகழேந்தி, துறைவாரி சங்க நிர்வாகிகள் எம்.சிவப்பிரகாசம், எம்.யோகராசு, சா.இளங்குமரன், எம்.முனிராஜ், அண்ணாகுபேரன், ஏ.தெய்வானை ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

## தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கம்

பல ஆண்டு காலமாக நிரப்பப்படாமல் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பிட வேண்டும், பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்ட தலைமை ஆய்வு நுட்பனர் பணியிடங்களை உருவாக்க வேண்டும். ஆய்வக நுட்பனர் கவுன்சிலை நடைமுறைப்படுத்த வேண்டும் உள்ளிட்ட 15 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு அரசு மருத்துவ ஆய்வக நுட்பனர் சங்கத்தினர் வெள்ளியன்று (செப். 28) சென்னை கலைவாணர் அரங்கம் முன்பு ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்த ஆர்ப்பாட்டத்திற்கு சங்கத்தின் மாநிலத் தலைவர் மா.செல்வகுமார் தலைமை தாங்கினார். பொதுச் செயலாளர் வீ.பார்த்தசாரதி, முன்னாள் மாநில பொதுச் செயலாளர் கோ.சுகுமார், தோழமை சங்கங்களின் மாநில நிர்வாகிகள் இரா.ந.நம்பி ராஜன், ம.அந்தோணிசாமி, வி.விசயகுமரன், தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் வடசென்னை மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி, தென்சென்னை மாவட்டத் தலைவர் சா.டானியர் ஜெய்சிங் ஆகியோர் வாழ்த்தி பேசினர். சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு போராட்டத்தை நிறைவு செய்து உரையாற்றினார். இதில் 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். ▼

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com